முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு 4 | .9 8-57 வெள்ளி | ஒலி 16

பட்டினி போட்டது போதும்!



"வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என நாம் குறிப்பிடும்போது கேலி பேசும் குணாளர்கள், 'சுதேச மித்திரன்' 1—8—57 இதழில் வெளியிட்டுள்ள கேலிச் சித்திரத்தை ... வேண்டுகிறோம்—இந்த சித்திரத்தையும் பிரசுரித்து, கீழ்க்கண்டவாறும் 'மித்திரன்' எழுதியுள்ளது.—

...ளவு நாளாக அலட்சியம் செய்யப்பட்டு வந்கிற...

வீழலுக்கு இறைத்த நீர்போல் வீணாகி விட்டது வரிப் பணம்!

நாடகப் புலவர் ஷேக்ஸ்பியரின் சோக நாடகங்கள், பார்ப்பவர் கண்களிலிருந்து தாரை தாரையாய் கண்ணீரை வரவழைக்கும் தன்மை கொண்டவை.

சில மாதங்களுக்கு முன்பு நடிப்புப் புலவர் லாரன்ஸ் ஆலிவர் ஷேக்ஸ்பியருடைய 'டைட்டஸ் ஆண்டிரானிக்கஸ்' என்னும் சோக நாடகத்தை நடத்திக்கொண்டிருக்கும்போது சில உணர்ச்சிக் கட்டங்களின்போது நாடகம் பார்க்க வந்தோர் 'ஓ'வென்று அலறினார்களாம்; பலர் — குறிப்பாகப் பெண்மணிகள் — மூர்ச்சை போட்டு விழுந்தார்களாம்!

அதன் பிறகு 'ஆம்புலன்ஸ் வண்டி'யைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அந்த நாடகம் மேற்கொண்டு நடைபெற்றதாம்.

—ஆண்டுதோறும் நமக்குக் கிடைக்கிற கணக்குத் தணிக்கையாளர் அறிக்கையைப் பார்க்கும்போது நமது நிலைமையும் சோக நாடகம் பார்த்து; மூர்ச்சை போட்டு விழுந்த கதையாகத்தான் இருக்கிறது!

—சென்ற இதழிலே அரசாங்கத்துப் பணம் விரயமான முக்கிய கட்டங்களை மட்டும் படித்தீர்கள். இதோ, அதன் தொடர்ச்சியையும் பாருங்கள்; கண்ணீர் விடுங்கள்!

❊❊❊ ஒரு குறிப்பிட்ட விவசாய இஞ்சினீயரிங் ஸ்டோரில் அதன் நடவடிக்கைகளை யாரும் சரியாக மேற்பார்வையிடவில்லையாம். 1950-ம் ஆண்டு முதலாகவே இருக்கின்ற ஸ்டார்க் பொருள்களையும் சரி பார்க்கவில்லையாம்.

அதனால் 1955-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கும்; 1956-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கும் இடையில் நடத்தப்பட்ட பரிசீலனைகள் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டத் தொகையைக் கீழ்க் கண்டவாறு கணக்கிட்டிருக்கின்றன:

(1) அநேக சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிடப்பட்ட 'ஸ்டோரி'லிருந்து பல உயர்ந்த ரக குழாய்வகைகளும், உப பாகங்களும் 'சப்ளை' செய்யப்பட்டிருக்கின்றன.

—ஆனால் இந்தச் சாமான்களுக்காக வசூலிக்கப்பட்டிருக்கும் தொகையோ குறைந்த ரகமான குழாய் வகைகளுக்கும், உப பாகங்களுக்கும் உரிய விலையாகும்!

பாவம், நல்ல ஊழியர்கள்! குறைந்த தொகையை வாங்கிக்கொண்டு; மதிப்புயர்ந்த சரக்கினைக் கொடுத்திருக்கிறார்கள்!

ஏன் அவர்கள் குறைந்த தொகைக்கு விலை உயர்ந்த சாமான்களைக் குறிப்பிட்ட நபர்களுக்குக் கொடுத்தார்கள்?

—இதன் பின்னேயுள்ள காரணங்களை தணிக்கையாளர் அறிக்கை விளக்கவில்லை.

ஆனால் இந்த முறைகேட்ட செயல் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம் எவ்வளவு தெரியுமா? 11,758 ரூபாய்!

(2) சில நபர்களுக்கு சரியான ஆதாரங்கள் இன்றியே சரக்குகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம் மட்டும் 37,239 ரூபாய்!

(3) இதேபோலவே சில ஆயில் இஞ்சின்களும், குழாய் வகைகளும் விற்பனையான தற்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இதன் மொத்த மதிப்பீடு ரூ. 13,518.

மேலும் சில வெளி நபர்களுக்குக் குறைந்த விலைக்கும் தரப்பட்டிருக்கின்றன. இதனால் விளைந்த நஷ்டம் 4,840 ரூபாய்.

❊❊❊ இதே போலவே இன்னொரு விவசாய இஞ்சினீயரிங் டெப்போவில் 1951-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து சேமித்து வைக்கப்பட்ட இயந்திரங்கள் சரிபார்க்கப்படவில்லை.

பல ஆண்டுகளுக்குப் பிறகு— அதாவது 1955—ஜனவரியிலும்; 1956—மார்ச்சிலும்தான் அலுவலாளர்கள் சரிபார்த்தனர்.

ஆனால் அப்போது முன்னம் சேமித்து வைக்கப்பட்டிருந்த பொருள்கள் அப்படியே இருந்தன என்று கருதுகிறீர்களா?

இல்லை!

விலை உயர்ந்த ஆயில் இஞ்சின்கள்; குழாய் வகைகள்; உப பாகங்கள், முதலியன காணப்படவில்லை.

இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் 66,380 ரூபாய்!

❊❊❊ இது தவிர டெப்போவிலிருந்து அரசாங்கத்தின் இன்னொரு இலாக்காவிற்கு 3 அங்குல ஜி. ஐ. குழாய்கள் 1602 அடி மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால் கணக்குப் புத்தகத்திலோ குறிப்பிட்ட அரசாங்க இலாக்காவிற்கு 5602 அடி குழாய்கள் மாற்றப்பட்டதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது!

உண்மையில் மாற்றப்பட்டிருக்கிற குழாய்கள் 1,602 அடிதான்! ஆனால் ஏட்டிலோ 5,602 அடி மாற்றப்பட்டதாகக் கணக்கு!

—இதனால் 4,000 அடி குழாய்கள் ஏப்பமிடப்பட்டிருக்கின்றன!

—இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் 15,625 ரூபாய்!

இந்தத் தொகை முழுவதும் கையாளப்பட்டிருக்க வேண்டும் என்று எழுதியிருக்கிறது தணிக்கையாளரது அறிக்கை!

❊❊❊ ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திற்கு பல துறைமுகப் பட்டினங்களிலிருந்து கப்பல் மூலம் அரிசி வரவழைக்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்த அரிசி மூட்டைகள் வந்து சேர்ந்த பிறகு நிறுத்துப் பார்த்தால் ஏராளமான அளவு அரிசி குறைந்தது.

மூட்டைகளின் எண்ணிக்கை மட்டும் சரியாக இருந்ததாம்! ஆனால் எடையோ சரியாக இல்லை!

இப்படிக் குறைந்துபோன அரிசியின் மதிப்பீடு எவ்வளவு தெரியுமா?

1,92,151 ரூபாய்!

—இந்தத் தொகையை சரக்கு கட்ட கப்பல் கம்பெனிகளிலிருந்து நஷ்டஈடு வசூலித்தால் என்ன?

அரசாங்கம் அதற்கும் முயற்சி செய்தது!

ஆனால் ஆரம்பத்திலேயே நஷ்டஈடு எதுவும் தருவதாகப் பேசப்படவில்லையாம்! அதனால் அரசாங்கமே நஷ்டம் முழுவதையும் ஏற்க வேண்டி நேரிட்டது!

★

—இதுவரை அரசாங்க இலாக்காக்களில் ஏற்பட்ட வீண் விரயத்தைப் பார்த்தோம்!

தனிப்பட்டோர் சிலர் தங்களது சொந்த செல்வாக்கை உபயோகித்து எப்படி வரிப் பணத்தைக் கொள்ளையடிக்கிறார்கள் என்பதற்கு இதோ விபரங்கள்:

❊❊❊ ஒரு தனிப்பட்ட கப்பல் கம்பெனிக்குக் கடன் தருவதற்கு மாநில அரசாங்கம் உத்திரவாதம் அளித்தது.

அதன் பேரில் சிறு துறைமுகங்களின் நிதியிலிருந்து அந்தக் கப்பல் கம்பெனிக்கு இரு தடவைகளில் ரூ. 5,35,500 கடன் தரப்பட்டது.

ஆனால் அந்தத் தனிப்பட்டோர் கம்பெனியோ முறையாக முதல் தவணையைத்தான் திருப்பிக் கொடுத்தது.

மற்ற தவணைகளைச் செலுத்தவில்லை.

அதற்குப் பிறகு அந்தக் கம்பெனியே 'திவால்' ஆகி விட்டது.

❊ 8-ம் பக்கம் பார்க்க

விற்பனையாகிறது!

இலட்சியக் காவியம்!

"பூகோளம்—சரிதம்—புள்ளி விவரம்— எனும் மூன்று துறைகளிலும் ஆராய்ந்தால், இனபத் திராவிடம் காணவேண்டும் என்பதற்கான அப்பழுக்கற்ற ஆதாரம் உள்ளன என்பதை மாறன எடுத்துக் காட்டியிருப்பதில், விளக்கமும், எழிலும் நிறம்ப இருக்கிறது."

—அறிஞர் அண்ணா

"யார்?" என்று கேட்டால் "நான் ஒரு திராவிடன்" என்று திராவிடத்திலுள்ள ஒவ்வொருவரும் விடையளிக்கும் வகையில் நண்பர் மாறன் அவர்கள் இந்நூலின் மூலம் ஒவ்வொருவருக்கும் அறிவும், தெளிவும், உணர்ச்சியும் ஊட்டுகிறார்.

—நாவலர் நெடுஞ்செழியன்

மாறன், எம். ஏ. எழுதிய

"ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?"

உங்களிடமும்—மாற்றுக் கட்சித் தோழர்களிடமும் இருக்க வேண்டிய கொள்கை விளக்கக் கையகராதி!

விலை ரூ. 1—8—0

முத்துவேல் பதிப்பகம்,

77, மதுரை ரோடு, திருச்சி—8



வெள்ளி 9-8-57 சென்னை

'கருப்புச் சட்டம்'

'இது ஒரு கொலைகாரச் சட்டம்'

'தொழிலாளர்களுக்குத் தரப்பட்டிருக்கும் உரிமைகளைப் பறிக்கும் முயற்சி!'

'இது அரசாங்கத்திற்கு சர்வாதிகார பலத்தைக் கொடுக்கிறது!'

—இப்படியெல்லாம் உறுப்பினர்களிடமிருந்தும், நாட்டிலே உள்ள நல்லவர்களிடமிருந்தும் கண்டனங்களை ஏற்றுக் கொண்டு 'முக்கியப் பணிகளின் பாதுகாப்புச் சட்டம்' என்கிற பெயரிலே ஒரு கருப்புச் சட்டம் பாராளுமன்றத்திலே நிறைவேறி; அவசர அவசரமாக ஆகாய விமானத்திலே பறந்து; அய்தராபாத்திலே உலவிக் கொண்டிருக்கும் குடியரசுத் தலைவரின் கையெழுத்தையும் பெற்று; காங்கிரஸ் நிர்வாகத்திலே மாபெரும் கரும்புள்ளியை ஏற்படுத்தியிருக்கிறது!

—இந்தக் 'கருப்புச் சட்ட'த்தின் மூலம் அரசு கட்டிலிலேயிருக்கும் ஆளவந்தார்கள் எதையெதை முக்கிய பணிகள் என்று கருதுகிறார்களோ; அவைகளில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் தங்களது நியாயமான கோரிக்கைகள் நிறைவேற; உலகத்திலேயுள்ள எல்லா ஜனநாயக நாடுகளிலும் தொழிலாளர்களுக்குத் தரப்பட்டிருக்கும் வேலை நிறுத்தம் என்கிற கருவியை உபயோகிப்பார்களேயானால்; அவர்களது இந்தச் செய்கை சட்ட விரோதமாக்கப்படடும்!

அதோடு தடை செய்யப்பட்ட இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்கிற ஒவ்வொருவருக்கும் ஆறு மாதம் சிறைவாசமோ அல்லது 200 ரூபாய் அபராதமோ கிடைக்கும்!

இந்த வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிடுபவர்களாகக் கருதப்படுபவர்களுக்கும் ஓராண்டுச் சிறைக் காவலோ; அல்லது 1,000 ரூபாய் அபராதமோ; அல்லது இரண்டுமோ கிடைக்கும்!

—இந்த வேலை நிறுத்த முயற்சிக்கு நிதி உதவி செய்பவர்களுக்குக்கூட தண்டனை உண்டாம்!

அதுமட்டுமா?

குற்றம் புரிந்திருப்பதாகச் சந்தேகிக்கப்படும் எந்த நபரையும்கூட இந்தச் சட்டத்தின் கீழ் போலீசார் எந்தவித 'வாரண்டு'ம் அன்னியில் கைது செய்து காவலில் வைக்கலாம்!

—இவ்வளவு கொடுமையான உருவம் கொண்டிருக்கிற இந்தக் கருப்புச் சட்டம் ஏகாதிபத்தியவாதிகள் என்று வர்ணிக்கப்பட்ட வெள்ளைக்காரன் ஆட்சியில் சட்டமாகியிருந்தால்கூட கவலைப் பட்டிருக்கமாட்டோம்!

ஆனால் வெட்கம்! வெட்கம்!! 'சோஷலிச மாதிரி' கொலு வீற்றிருக்கும் காந்தி சீடர்கள் செங்கோல் ஏந்தியிருக்கும் இந்த நாளிலே தொழிலாளர் உரிமைக்கு உலை வைக்கப்பட்டிருக்கிறது!

காந்தியார் ஆவி கண்ணீர் வடிக்கும்—இந்தக் கொடுமையைப் பார்த்து விட்டு! இட்லரும் வெட்கித் தலைகுனிவான்—இவ்வளவு சர்வாதிகாரம் கொண்ட கோரமான சட்டத்தைத் தன்னால் கூட இயற்ற முடியவில்லையே என்று! முசோலினி கதறுவான்; தன்னையே எதேச்சாதிகாரி என்று வர்ணிப்பவர்கள் இந்தக் காங்கிரஸ்காரர்களை என்னவென்று பெயரிட்டு அழைப்பார்கள்—அகராதியில் வார்த்தை கிடைக்[illegible]தே—என்று கவலைப்படுவான்!

—இந்தச் சட்டம் நிறைவேறுவதற்குக் காரணமாயிருந்திருக்கிற தபால் தந்தி ஊழியர்களின் நியாயமான போராட்டம் இன்று நேற்று முளைத்ததல்ல! சென்ற ஆண்டு ஜூலை மாதம் முதலே அந்த ஊழியர்கள் இதற்காகப் போராடியிருக்கிறார்கள்!

—பதவியிலே இருக்கிற காங்கிரஸ்காரர்கள் இந்த கருப்புச் சட்டத்தை அவசர அவசரமாக நிறைவேற்றியதற்கு இன்னொரு முக்கிய காரணமும் இருக்கிறது!

வேலை நிறுத்தம் தொடங்கப் போவதாக அறிவித்திருக்கிற தபால் தந்தி ஊழியர்களும்; மத்திய சர்க்கார் ஊழியர்களும் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறாத காரணத்தால்; வேறு வழியின்றி தொழிலாளர் வர்க்கத்தின் கடைசி ஆயுதமான வேலை நிறுத்தத்தை உபயோகிக்கப் போகிறார்கள் என்று பதவியிலே இருக்கும் அவர்கள் நினைக்கவில்லை!

ஏதோ அந்த ஊழியர்கள் அனைவரும் ஒன்றும் தெரியாதவர்கள் எனவும்; எடுப்பார் கைப்பிள்ளைகளெனவும் கருதிக்கொண்டு; அவர்களையெல்லாம் கம்யூனிஸ்ட்டுகள் தூண்டி விடுவதாகவும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்!

பாவம்; தொழிற் சங்கம் என்றாலே அது ஒரு கம்யூனிஸ்ட்டுகளின் கருவி என்கிற எண்ணம் பரவியிருக்கிறது!

அதனால்தான் பதவிப் பித்தர்களாய் சித்தம் தடுமாறியிருக்கும் ஆளவந்தார்களை நோக்கி தோழர் எஸ். ஏ. டாங்கே அறிவித்திருக்கிறார்:

"எங்களுக்கு மட்டும் இந்த இருபது லட்சம் அரசாங்க ஊழியர்களைத் தூண்டிவிடும் சக்தி இருக்குமேயானால் இப்போது இந்த (காங்கிரஸ்) அரசாங்கம் பதவியிலே இருக்காது. எங்களுக்கு அந்தச் சக்தி இல்லை!"

—அதற்கு அவர் போதுமான ஆதாரங்களையும் காட்டியிருக்கிறார்! அமெரிக்காவிலே 'தி அமெரிக்கன் பெடரேஷன் ஆப் லேபர்' என்றும்; 'காங்கிரஸ் ஆப் இண்டஸ்டிரியல் ஆர்கனிசேஷன்ஸ்' என்றும் இரண்டு பெரிய தொழிற்சங்கங்கள் இருக்கின்றன! அவைகள் அமெரிக்க அரசாங்கத் தொழிலாளிகளுக்கு ஒரு சம்பளக் கமிஷன் நியமிக்க வேண்டும் என்றும் ஆதரித்து வருகின்றன. ஆனால் அந்தத் தொழிற் சங்கங்களிலே மருந்துக்குக்கூட ஒரு கம்யூனிஸ்ட் கிடையாது!

தொழிற் சங்கம்; வேலை நிறுத்தம்—என்றால் உடனே 'கம்யூனிஸ்ட்'டை நினைத்துக் கொள்ளும் வழக்கம் இன்னும் சிலருக்கு இருக்கிறது. ஆனால் அந்தக் காலம் மலையேறி விட்டது என்பதையும்; தொழிலாளத் தோழர்கள் விழித்துக் கொண்டு விட்டார்கள் என்பதையும் அவர்கள் அனைவரும் உணரும் நேரம் வந்து விட்டது!

—கம்யூனிஸ்ட்டுகளின் ஆதிக்கத்தைக் குலைப்பதற்காகத்தான் ஆட்சியாளர்கள் இந்தக் கருப்புச் சட்டத்தை நிறைவேற்[illegible]களே யானால் அதைவிட அறிவற்ற செயல் வேறு எதுவுமே இருக்க முடியாது—என்றுதான் கூற வேண்டும்!

தபால்—தந்தி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வது நாட்டு மக்களை அதிக அளவு பாதிக்கத்தான் செய்யும். அதற்கு அதன் மூல காரணங்களை ஆராய்ந்து அவற்றைக் களைய முயற்சிக்காமல் போலீசாரின் குண்டாந்தடியை ஒரு ஆட்சி நாடுமேயானால் அது ஆளும் கட்சியை அழிவுப் பாதை நோக்கித்தான் அழைத்துச் செல்லும்!

—முக்கியமான பணிகளில் வேலை நிறுத்தம் இந்த நாட்டில் மட்டும்தான் நடைபெறவில்லை!

இங்கிலாந்திலே பஸ் ஊழியர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்தார்கள்! அதைத் தடுப்பதற்காக இங்கிலாந்து அரசாங்கம் 'கருப்புச் சட்டம்' எதையும் பிறப்பிக்கவில்லை!

ஜப்பானிலும், மேற்கு ஜெர்மனியிலும்கூட வேலை நிறுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன!

இத்தாலி நாட்டிலே தபால் தந்தி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்!

நார்வே நாட்டிலே போலீஸ்காரர்கள்கூட வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்!

—ஆனால் அந்த நாடுகளிலே ஒருபோதும் இதுபோன்ற 'கருப்புச் சட்டங்கள்' தலைகாட்டவில்லை. ஆனால் 'சோஷலிச பாணி' நோக்கிப் பீடுநடை போடுவதாகக் கூறப்படும் இந்த நாட்டிலேதான் இந்தக் கொடுமையைப் பற்றிக் கேள்விப்பட முடிகிறது.

பண்டித நேரு பஞ்சசீலத்தால் அயல் நாடுகளில் பெருமையடைவதாக நினைப்பதால் இந்தக் 'கருப்புச் சட்டம்' அவரது ஜனநாயக முகமூடியைக் கிழித்தெறிந்து; உண்மை சொரூபத்தைக் காட்டியே தீரும்!

—அதற்காக[illegible]வது காங்கிரஸ் ஆட்சியாளர்கள் இந்தக் 'கருப்புச் சட்ட'[illegible] முயலட்டும்!

One side page dark

'ஊருக்கு உபதேசிகள்!'

உ மக்கு என்ன தொழில்?"

—இப்படி ஒரு கேள்வி பிறக்கும்போது நான் ஓர் எழுத்தாளன்; ஆசிரியன்; டாக்டர்; இஞ்சினீயர் — என்று பதில் சொல்லிவிட முடிகிறது, நம்மில் பலரால்!

—இதே போலவே மத்திய அமைச்சர் பாஸ்போர்ட் வாங்க நேர்ந்தபோது அவரும் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல நேர்ந்தது.

பட்டேலுக்கு என்ன தொழில்?

மந்திரித் தொழில்!

—ஆனால் இப்படிப் பதில் சொல்லவில்லை, அவர்! தான் ஒரு பத்திரிகையாளன் என்றே குறிப்பிட்டிருக்கிறார்!

சென்ற மாத இறுதியில் அவர் இதற்கான பதிலையும் கூறியிருக்கிறார்:

"மந்திரி வேலை பார்ப்பது என்பது ஒரு தொழிலாக பாஸ்போர்ட் அதிகாரிகளால் கருதப்படவில்லை!"

—பட்டேலின் கூற்று இது!

சொல்லளவில் அவர் அவ்வாறு கூறியிருக்கிறாரே தவிர; செயலளவில் எந்த அமைச்சரும் அப்படிக் கருதுவதாகவே தெரியவில்லை.

—அதை ஒரு லாபகரமான தொழிலாகத்தான் காங்கிரஸ் மந்திரிகள் ஒவ்வொருவரும் கருதுகிறார்கள்!

உதாரணமாக, ரெயில்வே அமைச்சர் ஜகஜீவன்ராமை எடுத்துக் கொள்வோம்!

புகை வண்டி நிலையங்களிலே ஒரு சுவரொட்டியைப் பார்த்திருக்கலாம்—

"காலமும்; ரயில்களும் எந்த மனிதருக்காகவும் காத்திருப்பதில்லை!"

—என்று கொட்டை எழுத்துக்களிலே ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டிருக்கும்!

அதாவது, இந்திய அரசினரின் ரயில்கள் எந்தப் பெரிய மனிதருக்காகவும் காத்திருப்பது கிடையாதாம்!

காலம் எப்படி யாருடைய செல்வாக்கிற்கும் கட்டுப்படாமல் உருண்டோடிக் கொண்டிருக்கிறதோ, அதுபோலவே இந்திய ரயில்களும் ஓடிக் கொண்டிருக்கின்றனவாம்!

—ஆனால் உண்மையில் நடந்தது என்ன தெரியுமா?

சென்ற ஜூன், 26-ம் தேதி அன்று பம்பாய் 'விக்டோரியா டெர்மினஸ்' புகைவண்டி நிலையத்தில் சென்னை எக்ஸ்பிரஸ் சரியாக மாலை, மூன்று மணி இருபது நிமிஷத்திற்குப் புறப்படுவதற்கு இருந்தது.

வண்டியில் அநேகமாக எல்லாப் பிரயாணிகளும் ஏறிக் கொண்டார்கள்.

இஞ்சின் தயார்! இஞ்சின் ஓட்டிகளும்; கார்டும்—மற்றும் அனைவரும்கூடத் தயாராக இருந்தனர், புறப்படுவதற்கு!

—இருந்தாலும் அந்த எக்ஸ்பிரஸ் ரயில் புறப்படவில்லை.

ஏன் தெரியுமா?

அந்த ரயிலில் பிரயாணம் செய்வதாக இருந்த ரயில்வே அமைச்சர் கனம் ஜகஜீவன் ராம் இன்னும் வந்து சேர்ந்தபாடில்லை!

ஒரு நிமிஷமா? இரண்டு நிமிஷமா? சரியாக 21 நிமிஷம் கழித்து அவர் வந்து சேர்ந்த பிறகுதான் சென்னை எக்ஸ்பிரஸ் புறப்பட்டதாம்!

—இப்படி ஒரு தகவலை வெளியிட்டிருந்தது, பம்பாய் 'கரண்ட்' ஏடு!

இதற்கு கனம்' ரயில்வே அமைச்சரின் உதவியாளர் ஒருவர் அந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்!

என்ன எழுதியிருக்கிறார்?

உங்கள் பத்திரிகையில் வெளிவந்திருப்பதுபோல எங்கள் அமைச்சர் ஒன்றும் தாமதமாக வரவில்லை; அதனால் புகைவண்டியும் தாமதமாகப் புறப்படவில்லை. தனி ஒருவருக்காகக் காத்திருக்கும் அளவுக்கு எங்களது எக்ஸ்பிரஸ் ரயில்கள் அவ்வளவு ஒன்றும் மோசமாகி விடவில்லை'—என்றா?

அல்ல; அல்ல!

'கரண்ட்' பத்திரிகை எழுதியிருப்பதுபோல அன்றைய ரயில் 21 நிமிஷங்கள் தாமதித்துப் புறப்படவில்லையாம். ஆனால் பத்து நிமிஷங்கள்தான் தாமதித்துப் புறப்பட்டதாம்!

—இதில் எதில் உண்மையோ தெரியவில்லை! ஆனால் ஒரு அமைச்சரது வருகைக்காக புகை வண்டிகள் காத்திருந்து தாமதமாகப் புறப்படுவது என்பது சாதாரண விஷயம் என்பது மட்டும் இதனால் தெற்றென விளங்குகிறது.

'காலமும் ரயில்களும் எந்த மனிதருக்காகவும் காத்திருப்பதில்லை! — என்று மட்டும் ரயில்வே விளம்பரங்கள் தங்களது பெருமையைப் பறைசாற்றிக் கொள்கின்றன.

ஒரு சமயம் காலமும் ரயில்களும் மனிதர்களுக்காகத்தான் காத்திருக்காது; ஆனால் மந்திரிகளுக்கு மட்டும்தான் காத்திருக்குமோ என்னவோ தெரியவில்லை!

—ஏனெனில் மனிதர்களுக்கும் மேம்பட்டவர்களாகத்தான் இந்தக் காலத்தில் மந்திரிகள் தங்களைக் கருதிக் கொண்டிருக்கிறார்கள்!

★

அடுத்த உதாரணம்—நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்!

—வரி கொடுப்பவர்களின் வயிற்றிலே அடித்து சிக்கனமாக வாழும்படி உபதேசித்த உத்தமர்! தாய்மார்களை நோக்கித் தங்கத்தாலான தாலிகளை அறுத்துக் கொடுக்கச் சொன்ன தயாபரர்!

—ஆனால் இவரது நடவடிக்கைகள் ஏதாவது பிறருக்கு உதாரணமாக இருக்குமளவுக்கு இருந்திருக்கிறதா? ஊராரைப் பார்த்துச் சிக்கனமாக இருக்கும்படி உபதேசம் செய்கிற இந்த உயர் திருவாளர்—பெரியாரின் பேருரைப் பெற்றவர் — எப்போதாவது ஒரு முறை சிக்கனத்தைக் கடைப்பிடித்திருக்கிறாரா?

இல்லை; இல்லை; இல்லை!

சென்ற ஜூன் மாதக் கடைசியில் கிருஷ்ணமாச்சாரியார் பம்பாய் நகருக்கு 'விஜயம்' செய்திருந்தார்.

அப்போது அவர் எங்கே தங்கியிருந்தார் தெரியுமா?

'டாம்பீகம்' கொஞ்சுகின்ற; டாட்டாவுக்குச் சொந்தமான தாஜ்மகால் ஓட்டலில்! முற்றிலும் குளிர் சாதனம் பொருத்தப்பட்டிருந்த அறையில்!

அதன் ஒருநாள் வாடகை எவ்வளவு தெரியுமா?

115 ரூபாய்கள்!

ஏழை இந்தியா! அது தனது திட்டங்களை நிறைவேற்றுவதற்கே தவித்துக் கொண்டிருக்கிறது! அதன் ஒவ்வொரு பிரஜையையும் நோக்கி எது

...ம் பக்கம் பார்க்க

அவசரப் பேச்சும் ஆபத்தான பிதற்றலும்!

"சுப்ரமணியனார் 'திராவிட நாடு பிரிவினையை 10 வருடத்துக்கு ஒத்திவையுங்கள்' என்று எங்களைப் பார்த்துக் கேட்டுக்கொண்டார். உடனே, அகில இந்தியாவிலிருந்தும் அவருக்கு எதிர்ப்பு கிளம்பியது. 'உன் கட்சியின் விரோதிகளை ஆதரிப்பது போல, தி. மு. கழகத்தின் நாட்டுப் பிரிவினைத் திட்டத்தை ஒத்துக்கொள்ளும் பாணியிலே நீ பேசலாமா?' என்று, இந்தியா முழுவதிலுமுள்ள ஏடுகளெல்லாம் அவர் மீது சீறிப் பாய்ந்தன; அவரைக் கடிந்து, பிய்த்துத் தின்பதுபோல கண்டனங்களைக் கொட்டின; உடனே அவர் 'நான் அப்படிச் சொல்லவில்லையே' என்று கூறி தனது பேச்சுக்கு ஒரு புதுத் திருத்தம் தர முயன்றார்.

'திராவிடநாடு பிரிவினையை நான் ஒத்திவைக்கச் சொல்லவில்லை; நாச வேலைகளைத்தான் ஒத்திவைக்கச் சொன்னேன்' என்று மழுப்பினார் அமைச்சர்; இது முதல் தவறை மறைக்க எண்ணிச் செய்த இரண்டாவது தவறு ஆகும்!

அவர் செய்த முதல் தவறு—'திராவிட நாடு கொள்கையை 10 வருடம் தள்ளி வைக்க வேண்டும் என்று சொன்னது; இரண்டாவது தவறு —'நாச வேலையை 10 வருடம் தள்ளி வைக்க வேண்டும்' என்று சொன்னது.

தேள் கொட்ட வந்தால், 'தேளே கொஞ்சம் பொறு; நான் சாப்பிடப் போகிறேன்; சாப்பிட்ட பின் என்னைக் கொட்டலாம்' என்று கூறுவது எப்படியோ அப்படித்தான், 'நாச வேலையை இன்னும் பத்தாண்டு கழித்து செய்யலாம்; இப்பொழுது செய்யாதீர்கள்' என்பதும் ஆகும்.

அமைச்சரின் இந்தக் கூற்றுக்கு, இந்தியன் பினல்கோடு சட்டத்தின் எந்தப் பிரிவின்கீழ் என்ன தண்டனை கிடைக்குமோ எனக்குத் தெரியாது. அவசரப்பட்டு அமைச்சர் இப்படித் தவறு புரிவது ஆகாத காரியமாகும்!

—அறிஞர் அண்ணா

கற்பனை உரையாடல்

[காந்தியாரின் அருந் தவப் புதல்வர்—அவர்தம் அடிச் சுவட்டிலேயே நடந்து சென்றவர்—ஆச்சாரியாரின் புதல்வியை மணந்து சாதி பேதத்தைச் சாடிய பெருமை மிக்கவர்—அந்த தேவதாஸ் காந்தி மாரடைப்பால் மரணமடைந்தார் என்ற செய்தி பலரைத் திடுக்கிட வைத்தது. அவரது சேவை குறித்து பலபடப் பேசிக் கொண்டிருப்போர் இந்தக் கற்பனை உரையாடலுக்கும் சிறிது செவி மடுக்கட்டும்!]

ஆவிகளின் கண்ணீர்!

தேவதாஸ் காந்தி: அப்பா! வந்துவிட்டேன்! ஓடோடி வந்துவிட்டேன்! பாழும் சமுதாயத்தை விட்டுப் பறந்து வந்துவிட்டேன்! சூதும் வாதும் நிறைந்த இந்தியா! பதவிப் பித்தர்கள் — சுயநலவாதிகள் — பணத்தாசை பிடித்த பேய்கள் — வாழும் இந்தியக் காட்டை விட்டு தப்பித்து ஓடிவந்து விட்டேன்! இனி என்னால் ஒரு வினாடிகூட அங்கு இருக்க முடியாது!

காந்தியார்: மகனே! நீ என்ன கூறுகிறாய்? நீ ஏன் இப்படிக் கோழைபோல் ஓடிவர வேண்டும்? உன்னைப் பற்றி எவ்வளவு கனவுகள் கண்டு கொண்டிருந்தேன் தெரியுமா? என் இடத்திலே இருந்து கொண்டு நீ ஏழை மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தொண்டுகள் பலப்பல புரிவாய் என்றல்லவா எண்ணினேன்! பாடுபட்டு பெற்ற சுதந்திரத்தின் காவலனாக — உலகம் போற்றும் இந்தியத் தலைவனாக—வட இந்தியாவையும் தென்னிந்தியாவையும் ஒன்றுபடுத்திப் பிணைக்கும் சங்கிலியாக—நீ விளங்க வேண்டுமென நினைத்தேனே! நீ தென்னாப்பிரிக்காவிலே பிறந்தபோது, நான் ஏழை இந்தியக் கூலிகளின் விடுதலைக்காகப் பாடுபட்டு வந்தேன். 'அவர்களைப் போன்று அல்லற் படும் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களின் கண்ணீரைத் துடைக்கவே நீ பிறந்திருக்கிறாய்' எனக் கூறி அன்று நான் பெருமைப் பட்டதுண்டு!

......ஊம்!...நீ ஏன் அதற்குள் ஓடோடி வந்துவிட்டாய்? இந்தியா இன்று எப்படி உள்ளது? நேருவின் தலைமையிலே அது உலகத்திலேயே தலைச் சிறந்த சுதந்திர நாடாக விளங்குமென நினைக்கிறேன்! இல்லையா?

தேவ: ஐயோ! அப்பா! அதைப் பற்றி மட்டும் என்னைக்கேட்காதீர்கள்! நான் அவைகளை மறக்கத்தானே ஓடோடி வந்தேன்! மறுபடியும் அந்த நினைப்பைக் கிளறி என் நெஞ்சத்திலே நெறிஞ்சி முட்களைப் பாய்ச்சுகிறீர்களே!

காந்தி: நீ என்ன கூறுகிறாய்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!......இந்தியா இன்று எல்லா துறைகளிலும் தலைச் சிறந்த நாடாக விளங்கும் என நான் கனவு கண்டு கொண்டிருக்கிறேனே!

தேவ: உங்கள் கனவு வெறும் பகற்கனவப்பா!

காந்தி: என்ன? பகற்கனவா? ஐயோ! இந்தியா விடுதலை பெற எவ்வளவு பாடுபட்டோம்! பாரத மாதாவின் கைவிலங்கை உடைத்தெறிய எவ்வளவு பேர்களைப் பலி பீடத்திற்கு அனுப்பினோம்! இவ்வளவு பாடுபட்டு வாங்கிய சுதந்திரத்தை இந்தியா பயன்படுத்திக் கொள்ளவில்லையா? இந்தியாவில் இன்னும் ஏழ்மைப் பிணி இருக்கிறதா?

தேவ: ஆம்! ஏழ்மைப் பிணி எங்கும் பரவியுள்ளது! அது மட்டுமல்ல...பதவிப் பிணியும், பணத்தாசைப் பிணியும் கூடப் பரவியுள்ளது! இந்தியாவில் நான் இருக்கும் பொழுது, என் உள்ளத்தைத் திறந்து பேச இடமில்லை! இங்காவது என் உள்ளத்தைத் திறந்து காட்ட விரும்புகிறேன்!

இந்தியாவிலே இன்னும் ஏழைகளும் அடிமைகளும் மாறவில்லை! புள்ளிமானைத் துரத்திச் செல்லும் பருந்தைப் போல பணக்காரர்களும், நிலப் பிரபுக்களும் ஏழைகளைத் துரத்திச் சென்று, கசக்கிப் பிழிந்து, அவர்கள் உடலிலே கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் அட்டைபோல் ஒட்டிக் கொண்டு உறிஞ்சி வாழ்கிறார்கள்!

தாங்கள் ஆரம்பித்த விடுதலைப் போரில் எத்தனை கோடி மக்கள் உற்சாகத்தோடு கலந்து கொண்டார்கள்? அப்பொழுது நாம் எவ்வளவு கனவுகள் கண்டோம்? அவ்வளவு கனவுகளும் வெறுங் கனவுகளாகவே போய் விட்டதே அப்பா! 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த உலகினை அழித்திடுவோம்!' என்ற வீரமொழி இன்று பொய்த்து விட்டதப்பா!

ஆயிரக் கணக்கான ஏழைகள் வேலையின்றித் தவிக்கிறார்கள்! பட்டினியாலும் பசியாலும் வாடுகிறார்கள்! தங்களால் வளர்க்கப்பட்ட புனிதமான காங்கிரஸ் ஸ்தாபனத்திலே இன்று பதவி வேட்டைக்காரர்களும், பணக்காரர்களும், கள்ள மார்க்கெட் வியாபாரிகளும், வடநாட்டு மார்வாடிகளும் தான் தலைவர்களாக விளங்குகிறார்கள்! அதிலிருந்து உண்மையான காங்கிரஸ்காரர்கள் விரட்டப்பட்டுவிட்டார்கள்! இன்று வஞ்சக நெஞ்சு படைத்த போலி வேடதாரிகளே பாராட்டப்படுகிறார்கள்! உண்மையான மக்களின் தொண்டர்கள் வாழ வகையின்றித் தவிக்கிறார்கள்!

காந்தி: நீ சொல்வதை என்னால் நம்பவே முடியவில்லையே! ஆமாம்; நேரு என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர் கூடவா இதையெல்லாம் கவனித்துக் கொண்டு பேசாமலிருக்கிறார்?

தேவ: நேருவா?......அவருக்கு ஊர் சுற்றவே நேரம் போதவில்லையே! 'பல நாடுகளையும் பலப்பல தலைவர்களையும் எப்படித் தன் வயப்படுத்துவது?' என்ற சிந்தனையிலேயே அமர்ந்திருக்கிறார்! அவருக்கு இந்தியாவைப் பற்றியும் இலங்கைத் தமிழர்களின் அல்லல்களைப்பற்றியும் நினைக்க நேரமேது?

காந்தி: இலங்கைத் தமிழர்கள் நிலை இன்னும் சீர்திருந்தவில்லையா?... ஐயோ!...நான் மட்டும் உயிரோடு இந்தியாவிலிருந்தால் அவர்கள் விடுதலைக்காகப் பாடுபடலாமே!......ஊம்......என்ன செய்வது?

தேவ: தாங்கள் மட்டும் வருந்தி என்ன செய்வது? தங்களின் சீடர்கள் இதை உணரவில்லையே! அவர்களெல்லாம் 'பதவி மோகம்' கொண்டு அலைகிறார்களே!...அதையெல்லாம் பார்க்கச் சகிக்காமல் தான் வந்து விட்டேன்!

காந்தி: நீ செய்தது பெரிய தவறு! நீ அங்கேயே இருந்து கொண்டு பதவிப் பித்தர்களையும், பண முதலைகளையும் காங்கிரசை விட்டு நீக்கி...

தேவ: ஐயோ!...அப்படிச் செய்தால், காங்கிரஸ் அடுத்தத் தேர்தலில் மண்ணைக் கவ்வி விடுமே!

காந்தி: மகனே! நீயா இப்படிப் பேசுகிறாய்?......காங்கிரசை ஆரம்பித்தபோது தேர்தலில் வெற்றி பெறுவதற்காகவா துவக்கினோம்?...... அதுசரி; மாமா ராஜாஜி எப்படியிருக்கிறார்?

தேவ: இப்பொழுதுதான் அவர் உள்ளம் மாறியிருக்கிறது. தென்னகத்துக்கு இழைக்கப்படும் அநீதிகளை உணர ஆரம்பித்திருக்கிறார்!

காந்தி: தென்னகத்துக்கு அநீதியா? முதன் முதலில் சுதந்திரப் போரைத் துவக்கிய கட்டபொம்மன் நாட்டிலா இருக்கிறது?

தேவ: ஆம்! அதைக் காணச் சகிக்காமல்தான் வந்துவிட்டேன்! ஒருவாரம் முன்பாக சென்னை சென்றிருந்தேன்! வீதிகளின் ஓரத்திலே ஒட்டிய வயிறுடன் காட்சியளிக்கும் ஆயிரக் கணக்கான மக்களைக் கண்டேன்! ஓட்டைக் குடிசையிலே ஓட்டாண்டியாக வாழும் ஏழை மக்களையும், அவர்களருகிலே விண்ணை முட்டும் கட்டிடங்களையும் கோபுரங்களையும் கண்டேன்! அங்குள்ள சீரழிந்த சாலைகளையும், வடநாட்டு சாலைகளையும்,—தென்னகத்திலே ஓடும் ஓட்டை இரயில் பெட்டிகளையும், வடக்கிலே ஓடும் பலப்பல மித சீதோஷ்ண பெட்டிகளையும் ஒப்பிட்டு நோக்கினேன்! வடக்கேயுள்ள இன்பபுரியையும் தெற்கேயுள்ள நரகத்தையும் கண்டபோது என்நெஞ்சம் நெகிழ்ந்தது! உருகியது! எரிமலையாகி வெடித்தது! வந்து விட்டேன் தங்களிடம்!

[இங்ஙனம் உணர்ச்சியோடு பேசிவிட்டு தேவதாஸ் காந்தி காந்தியாரின் மடியிலே விழுகிறார்.]

—ஆநந்தானந்தன்

காலம் பதிலளிக்கும்!

"எங்களைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் சிலர் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? 'இந்த தி. மு. கழகத்தார் சட்டசபையில் மந்திரிகளின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவிக்கின்றனர்' என்கிறார்கள். யார் கேள்விக்கு யார் பதில் சொல்வது?

மந்திரிகளை உறுப்பினர்கள் கேள்வி கேட்பதுதான் சட்டசபை முறை. உறுப்பினர்களைப் பார்த்து, மந்திரிகள் கேள்வி கேட்பது என்பது சட்டசபையில் நடக்கும் முறையல்ல; எனவே, நாங்கள்தான் கேள்விகளை எழுப்புபவர்கள். எங்கள் கேள்விகளுக்குத்தான் மந்திரிகள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதை விடுத்து, அவர்கள் எங்களைப் பார்த்து கேள்வி கேட்க என்ன இருக்கிறது? மந்திரிகள் யாரும் எதுவும் கேட்காதிருக்கும்போது நாங்கள் எப்படிப் பதிலளிக்க முடியும்?

அப்படி மந்திரியே எங்களைக் கேள்வி கேட்டு நாங்கள் பதிலளிக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள்; அதனால் என்ன நஷ்டம்? நாட்டு மக்கள் பதிலளிக்கிறார்கள்—காலம் பதிலளிக்கிறது!

—அறிஞர் அண்ணா

நீட்டோலை

மு. கருணாநிதி

'நாடுகாண் காதை'யும்- நங்கவரம் பாதையும்!

அன்புள்ள பொன்முடி!

"உழாஅ நுண் தொளி உள்புக்கு அழுந்திய,
கழாஅ மயிர் யாக்கைச் செங்கண் காரான்
சொரிபுறம் உரிஞ்சப் புரிநெகிழ்பு உற்ற,
குமரிக் கூட்டின் கொழும்பல் உணவு,
கவரிச் செந்நெல் காய்த்தலைச் சொரியச்,
கருங்கை வினைஞரும் களமரும் கூடி,
ஒருங்கு நின்றார்க்கும் ஒலியே அன்றியும்..."

என்ன; எதுவும் புரியாமல் திகைக்கிறாயா? "கடமுடா" என்று ஏதேதோ கவிதை சொல்கிறானே நண்பன் என்று விழிக்கிறாயா?

மேலே தீட்டியிருப்பது இளங்கோவடிகள் தந்த ஓவியம்! சிலப்பதிகாரத்தின் மூலம் சேர, சோழ, பாண்டியர் நாடுகளின் வளங்குறித்து, அக்காலத் தமிழகத்தின் உருவத்தை அளிக்கின்ற பெருமை அவருக்கே உரியதல்லவா? அதிலேதான் நான் மேலே தீட்டியிருப்பது ஒரு கட்டம்.

"நாடுகாண் காதை" என்பது சிலப்பதிகாரத்தில் ஒரு பகுதி...கண்ணகியும் கோவலனும் கவுந்தி அடிகளும் புகாரினின்றும் மதுரை செல்லும் வழியில் காணுகின்ற காட்சிகளை சிலப்பதிகார ஆசிரியர் அழகு மலியும் கவிதைகளாகத் தந்திருக்கிறார்.

தமிழகத்தின் தனிச் சிறப்புகளையும் வளங்கொஞ்சும் நிலங்களையும், பார்க்குமிடமெல்லாம் பசுஞ்சோலைகளையும், நோக்குமிடந்தோறும் மகிழ்ச்சிக் கூத்தாடும் மாந்தர்களையும் கவுந்தியடிகள், மூலம் கண்ணகிக்குத் தெரிவித்து, அதன் மூலம் நமக்கு ஒரு நீண்ட பெருமூச்சை எழச் செய்கிறார் சேர இளவல்.

பாரேன்; வயலோரங்களில் நெற்கூடுகள் நிறைந்து கிடக்கின்றன. அந்தக் கூடுகள் பிரிந்து விடாமலிருக்க அவற்றை வைக்கோல் கயிற்றால் கட்டி வைத்திருக்கிறார்கள். சேறுபடிந்த மேனியும், சிவப்பேறிய கண்களுமுடைய எருமை மாடுகள் தினவெடுத்த உடலை நெற் கூடுகளின்மேல் உராய்கின்றன—அதனால் வைக்கோற் கயிறுகள் அறுந்து, கூடுகளில் உள்ள நெல்மணிகள் கழனியில் விளைந்திருக்கும் நெற் பயிரின்மேல் சிந்திச் சிதறுகின்றன. அதைக் கண்ட உழவர்கள் எருமைகளை விரட்டுகின்ற ஒலி ஒருபுறம் கிளம்புகிறது. கவரிச் செந்நெல்; அதாவது கவரிமானின் மயிர்க் கொத்து போல விளைந்து கிடக்கும் நெல் என்று சிறப்பிக்கிறார் அழகு தமிழில்!

வழிப் பயணத்தில் இது ஒரு கட்டம்—இதிலே நீ ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டியது தமிழகத்து நெல் வளம் பற்றிய சிறப்பையல்ல! நெற் கூடுகளின்மீது எருமைகள், தினவெடுத்த உடல்களைத் தேய்க்கின்றன. அதனால் கூடுகள் சிதைந்து நெல் மணிகள் சிதறுகின்றன. அந்த எருமைகளை உழவர்கள் விரட்டுகிறார்கள்.

இதை ஒருமுறை சிந்தித்து, மனதில் பதிய வைத்துக் கொண்டு, மேலும் படி நான் எழுதுவதை!

"கடிமலர் களைந்து, முடிநாறு
அழுத்தித்,
தொடிவளைத்தோளும், ஆகமும்
தோய்ந்து
சேறு ஆடு கோலமோடு வீறு
பெறத் தோன்றி......"

—உழவு மகளிர் உற்சாகத்தோடு பணிபுரிவதை இளங்கோவடிகள் நமக்குக் காட்டுகிறார்.

கழனிகளில் இறங்கி கட்டமுகிகள் களிப்புதுள்ள உழைப்பதைக் கூறவந்தவர், நிலவளத்தால் தமிழகம் ஏற்றம் பெற்றிருந்தமைக்கு முதல் காரணம் உழவர்களின் பூரிப்பே என்பதையும் சொல்லாமற் சொல்லுகிறார். சூடி வாடிவிட்ட மணமிகு மலர்களை எடுத்தெறிந்துவிட்டு நாற்றின் முடிகளிலுள்ள தளிரை நறுக்கிச் சூடிக்கொள்கிறார்கள். தோளிலும் மார்பிலும் சேறுபடிந்த கோலத்தோடு கம்பீரமாகவும் அழகாகவும் தோற்றமளிக்கிறார்கள்; உழவர் குல மகளிர்!

அதுமட்டுமா?

"கொழுங் கொடி அறுகையும்,
குவளையும் கலந்து
விளங்கு கதிர் தொடுத்த
விரியல் சூட்டிப்
பார் உடைப்பனர் போல்
பழிச்சினர் கைதொழ
ஏரோடு நின்றோர் ஏர்
மங்கலமும்......

—கொழுமையான கொடிகளையுடைய அறுகம் புல்லும்; குவளை மலரும் கலந்து நெற்கதிர்களோடு சேர்த்துத் தொடுத்த மாலைகளை ஏர்களில் அணிவித்து, பூமியையேப் பிளப்பவர்களைப்போல ஏரைப் போற்றுவோர் கைதொழுது ஏர்மங்கலப் பாடல் இசைப்பார்கள்.

உழவர்களின் ஏற்றம் பழைய தமிழகத்தில் எவ்வண்ணம் இருந்தது என்பதற்கு "நாடுகாண் காதை" எப்படிப் பயன்படுகிறது பார்த்தாயா?

கண்ணகியும் கோவலனும் நாடு கண்டவாறு வழிநடைப் பயணம் நடத்திய நிகழ்ச்சிதான் நாடுகாண் காதையாகிறது சிலம்புச் செல்வத்தில்.

அவர்கள் கண்ட நாடுதான் நாம் இன்று காண்கின்ற நாடும்! நாடுகாண் காதை; ஏறத்தாழ இடம் ஒன்றுதான் —நிலைதான் வெவ்வேறு!

கண்ணகி கோவலன் கண்ட நாட்டில், உழவர்கள் உற்சாகமாகப் பணி புரிந்தார்கள். உழவு செழித்தது. வரப்பு உயர்ந்தது வாழ்வு உயர்ந்தது, நாடும் உயர்ந்தது!

கொண்ட மனைவியை மறந்து மாதவி மனையிலே காதல் விருந்துண்டு, பின்னர் அவளையும் பிரிந்து குடி தாழ்ந்தது. வறுமை சூழ்ந்தது என்ற வேதனை இதயத்தைத் துளைத்திட, இனிப் பொருளீட்டப் புதுவழி காண்போம்; புது வாழ்வு பெறுவோம் எனத் திட்டமிட்டுச் சென்று கொண்டிருக்கும் கோவலனின் நிலைதான் இந்தத் தாழ்ந்த தமிழகத்து நிலையும்!

யார் பிடியிலோ சிக்கி வேர் பட்ட மரம்போல தார் புனைந்து தரணியாண்ட தமிழினம் வீழ்ந்தது; இன்று மீண்டும் தலை தூக்கிப் புது நிலை காணத் துடித்துப் புது வழியில் பயணம் நடத்துகிறது.

அந்த வழியில் கோவலனைப் போலவே நாமும் உழவர்களை சந்திக்கிறோம். "நாடுகாண் காதை" யொன்று உருவாகிறது.

இங்கே நாம் காணுகிற உழவர் இன மகளிர் வாடிய மலர்களைத் தூக்கி எறிந்துவிட்டு, நாற்று முடியெடுத்து அணிவதில்லை. காரணம்; மலர்களை எறியக்கூடாது என்பதால் என்று நான் கூறப்போகிறேன் என எண்ணாதே! இவர்கள் மலர் சூடுகிற அளவுக்கு தலை வாரிக் கொள்ள வகையேது? தலையை சீவிக் கொள்ள எண்ணெய் வாங்க வழி ஏது? வரண்டு பரட்டையாகக் காட்சி தருகிற "பிடாரித் தலை" கொண்ட வேதனை உருவங்களைத்தானே வயல் வெளிகளில் காண முடியும் இங்கே!

மார்பகத்திலும் தோளிலும் சேறு பட்டிருப்பது ஒரு தனி அழகைக் கொடுப்பதோடு, அவர்கள் மகிழ்ச்சியோடுபாட்டு முழங்கிக் கொண்டு பணி புரிவது கழனிகளில் காரியமாற்றும் ஆடவருக்கும் எழுச்சியைத் தருகிறது. அதனால் வேலை சுறுசுறுப்பாக நடக்கிறது—விளைவும் வெற்றிகரமாக அமைகிறது! இது; பழைய நாடுகாண் காதை!

புதிய நாடுகாண் காதையில் மகளிர் பாடல்; வயலோர ஒப்பாரியாகவே அமைந்து விடுகிறது தலையில் மலர் இல்லை; அதனால் அதை வீசிவிட்டு முடி நாற்று அணியும் தேவையில்லை.

தலையில் மலர் இல்லாதது மட்டுமல்ல; உள்ளத்திலும் உவகையில்லை; அதனால் இசை, "பிலாக்கணம்" போல் தெரிகிறது!

ஏர்களுக்கு மாலை அணிவித்து, நாட்டில் சீர் தழைக்கச் செய்த உழவர்கள் பூமியைப் பிளப்பதுபோல் ஏர்களைச் செலுத்தினார்கள்; கவுந்தியும் கண்ணகியும் கோவலனும் கண்ட தமிழகத்துப் பெருநிலத்தில்!

நாம் காணும் தமிழகத்தில் ஏர்களைத் தொடுவதற்கே உழவர்களுக்கு உரிமையில்லையெனும் ஆணவம் முழங்குகிறது. பூமியைப் பிளப்பது போல் ஏரைச் செலுத்த முற்பட்டனர் என்கிறார் இளங்கோ!

ஆனால், இன்று உழவர்களின் நெஞ்சைப் பிளப்பதுபோல் அதிகார ஏரைச் செலுத்துகிறார்கள்; ஆர்ப்பாட்டத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் நிலப் பிரபுக்கள்.

என்னப்பா; சிலப்பதிகாரத்தில் ஆரம்பித்து மெதுவாக நங்கவரத்திற்கே அழைத்துக் கொண்டு போகிறாய் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா உனக்கு? என் செய்வது பொன்முடி; நேற்று நானும் அன்பில் தர்மலிங்கமும் காஞ்சிபுரத்தில் அண்ணாவைச் சந்தித்து நங்கவரம் விவசாயிகள் அவதி குறித்துப் பேசினோம். சென்ற கிழமை எழுதியிருந்தேனல்லவா; விவசாய மந்திரியை கல்லணையில் சந்தித்த சேதி! அவர் மாவட்ட அதிகாரிகளிடம் பொறுப்பை ஒப்புவித்து விட்டுப் போனார். மாவட்ட அதிகாரிகளின், சமாதானக் குரலுக்கு விவசாயிகளின் தலைவர்கள் இணங்கி வருகிறார்கள். ஆனால் நிலப் பிரபுக்களோ

'சட்டம் இருக்கிறது. எம்மிடம்; அதனால் கொட்டுவோம்' எனக் கொடுக்கைத் தூக்கிக் காட்டுகிறார்கள்.

இது பற்றி, மீண்டும் விசாரணை நடத்தவோ நிலைமையை அறியவோ நங்கவரத்துக்கு திரு. பக்தவத்சலம் வரும் 11-ம் நாள் வரப்போகிறாராம். இறுதியாக அவரை ஒருமுறை சந்திப்பது; இது சம்பந்தமாக! அந்த சந்திப்பும் பயன் தரவில்லையானால் அதன் பிறகு என்ன என்பதை முடிவு கட்ட வேண்டியது அவசரமும் அவசியமுமாகும் என்பதை நீ அறியாமலா இருப்பாய்?

அண்ணாவிடம் நங்கவரம் பற்றிப் பேசிவிட்டு சென்னை வந்தால் குளித்தலையிலிருந்து முத்துகிருஷ்ணனும், கவண்டம்பட்டி முத்துவும் தொலைபேசி மூலம் இரவு என்னைத் தூங்கக்கூட விடுவதில்லை; அவ்வளவு செய்திகளைக் குரல் நடுங்கக் கூறுகிறார்கள். சென்ற ஆண்டுவரையில் நிலத்தில் பாடுபட்ட ஏழைத் தொழிலாளிகளுக்கு இந்த ஆண்டு உரிமை மறுக்கப்படுகிறது. எவ்வகையிலாவது கூலிகளாக வேலை செய்கிறோம் என உழவர்கள் எழுதித் தர வேண்டுமென்கிறது; நிலப்பிரபுத்துவத்தின் கடைசி மூச்சு!

சென்ற ஆண்டுபோலவே நாங்கள் பணிபுரிகிறோம்; அறுபது—நாற்பதுகூடத் தேவையில்லை; நிலத்தில் இறங்க அனுமதி கொடுத்தால் போதும்—எனக் கேட்கின்ற உழவர்களின் கோரிக்கை குப்பையில் எறியப்படுகிறது.

மலையாளத்திலிருந்தும், மன்னார்குடி வட்டத்திலிருந்தும் கூலி ஆட்களை அழைத்து வந்து வீம்புக்காக வேலை செய்யச் சொல்கிறார்கள்.

அதே சமயம் அந்த நிலத்திலே தன் ரத்தத்தை வியர்வைத் துளிகளாக அபிஷேகித்த பரிதாபத்திற்குரிய பாட்டாளி மறுக்கப்படுகிறான். அவன் பிள்ளைக் குட்டிகளோடு கழனியோரம் நின்று கண்ணீர் விடுகிறான்.

இப்போது சொல்; "நாடு காண் காதை" சிலப்பதிகாரத்திற்கும் சிதைந்த தமிழகத்திற்கும் எவ்வளவு வித்தியாசப்படுகிறது என்று!

சிலப்பதிகாரத்தைப் படிக்கும்போது அந்நாள் உழவர் பெருமக்களின் மனநிறைவையும், மகிழ்ச்சிப் பெருக்கில் அவர்கள் எந்நாளையும் திருநாளாக்கிக் கொள்வதையும் சுவைத்தேன்.

அதே சமயம் பொன்முடி; குளித்தலையிலிருந்து தொலைபேசி மூலம் சேதி வருகிறது. மீண்டும் வேதாளம் முருங்கமரம் ஏறிவிட்டது என்று!

இருநிலைகள்—அன்றைய தமிழகம்; இன்றைய தமிழகம்—இடையே 'நாடுகாண் காதை!

இந்த நேரத்தில் உன்னிடமிருந்து ஓலை! சரி. இந்த நிலை விளக்கத்தையே மடலாக வரைவோம் எனத் துணிந்தேன். நீயும் இலக்கிய ரசிகனாயிற்றே. உனக்குச் சுவையோடு நங்கவரத்தையும் கலந்து தரலாமென்று நினைத்தேன்; அதன் விளைவே இந்த முடங்கல்.

துவக்கத்தில் நெற்கூடுகளை எருமைகள் சிதைக்கின்றன; நெல்மணி வயலில் சிதறுகிறது—அதனால் அந்த எருமைகளை உழவர்கள் விரட்டுகிறார்கள்—என்ற ஒரு காட்சியை உனக்குத் தெரிவித்திருக்கிறேன் அல்லவா; அதை இப்போது நங்கவரத்தோடு ஒப்பிட்டுப் பார்!

விவசாயமென்னும் நெற்கூடுகளை தினவெடுத்த உடலால் சிதைக்கின்ற எருமைகளை நாமறிகிறோம்—நாடு அறிகிறது—நாடாளும் மந்திரிகள் அறிகிறார்கள். ஆனால் சிலப்பதிகாரத்தில் எருமைகளை விரட்டுவதுபோல் இப்போது விரட்ட முடிவதில்லை, காரணம்; சட்டமெனும் நீண்ட கொம்புகளைக் காட்டியபடி மாடு முட்ட வருகிறது.

நெல் சிதறாமல் பாதுகாக்க, நெல் கூடுகளை அழியாமல் பார்த்துக் கொள்ள உழவர்கள் மாடுகளை ஓட்டுகிற ஒலி எங்கும் கேட்கிறது; அந்த நாடு காண் காதையில்!

இங்கோ; உழவர்கள் மாடுகளிடம் நெருங்க முடியவில்லை. நெருங்கக்கூடிய ஆற்றல் பெற்ற ஆளவந்தார்களோ எருமைகளை விரட்ட இதுவரை முன் வரவில்லை. அதனால் நெல் சிதறும் — பயன் குறையும். செழிப்புள்ள தமிழகம்; சிலப்பதிகாரத் தமிழகம்—ஒரு கனவாகவே போய்விடும்!

முதலில் கவனிக்க வேண்டிய—பிரச்சினை "நெல் கூடுக'ளைக் காப்பாற்ற வேண்டியதே!

நான் இங்கே குறிப்பிடும் நெற் கூடுகள்; நெல் மணி நிறைந்த கூடுகளல்ல—உழைப்பாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளையே குறிப்பிடுகிறேன். அதைச் சிதைத்து சிதற அடிக்க தினவெடுத்துத் திரியும் சில பிரபுகளுக்கு ஒரு மூக்கணாங்கயிறு மிக அவசியம் என்பதை நல்லவர்கள் நிச்சயம் உணருவார்கள்.

அந்த நல்லவர்களை வரும் 11-ம் தேதி சந்திப்பேன். அவர்கள் நல்லவர்கள்தானா என்பதை நிர்ணயிக்கக்கூடிய தகுதி நமக்கில்லை; 11-ந் தேதி வழங்கப்படும் தீர்ப்பைப் பொறுத்திருக்கிறது அந்தத் தகுதி!

11-ந் தேதிக்குப் பிறகு மடல் எழுதுகிறேன். எதற்கும் நங்கவரம் வருவதற்குத் தயாராக இரு! சிறைக்கு அஞ்சாத சிங்கமாயிற்றே நீ!...

அன்புள்ள,

நண்பன்.

கோபுரமேறியோர் கீழே இறங்கியே தீருவர்!

திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டு மக்களின் நல்ல நம்பிக்கையைப் பெற்றிருக்கின்றது; பிரமாண்டமான சக்தியைப் பெற்றிருக்கிறது; நாட்டுக்குரிய நல்ல ஆக்க வேலைகளில் அது ஈடுபட்டிருக்கிறது; தி.மு.க. தோழர்கள் நல்ல வேலைகளில் கவனம் செலுத்துபவர்கள்; பம்பரம்போல சுற்றி காரியமாற்றக்கூடிய திறன் படைத்தவர்கள். நாங்கள் சாமான்யர்கள்தான்—என்றாலும் எங்கள் பிரச்சினை பிரும்மாண்டமானது. நாட்டு மக்கள் எங்களிடம் நல்ல நம்பிக்கை கொண்டுவிட்டார்கள்.

வீதியிலே செல்லும் வளையல்காரனை அழைத்தால் அவனை மதித்து அழைப்பதாகக் கருதமுடியாது. அவன் பெட்டியிலே உள்ள வளையல்களுக்குத்தான் மதிப்பு. எங்களுக்கு மதிப்பு வளர்கிறது என்றால், அந்த மதிப்பு எங்களைச் சேர்ந்ததல்ல; எங்கள் பேச்சிலே பொதிந்துள்ள தத்துவத்துக்குத்தான் மக்கள் மதிப்புக் கொடுக்கிறார்கள்!

எங்கள் கட்சித் தோழர்கள் பேசுகிற பேச்சை மாற்றுக் கட்சிக்காரர் ஒருவர் அரை மணி நேரம் பொறுமையுடன் கேட்டால், அவருக்குத் தலை சுற்றும். நாங்கள் பேசுவது நியாயம் என்று தோன்றும். எனவே எங்களை வெறும் பேச்சுக்காரர்கள் என்று கூறி ஏளனம் செய்வோர் உண்மையை உணரவேண்டும். எங்களை எவ்வளவுதான் இழித்தும் பழித்தும் எதிரிகள் கூறினாலும் நாட்டு மககள் நல்ல இதயத்தை எங்களிடம் வைத்திருக்கிறார்கள்.

நாங்கள் சொல்வதை இப்பொழுது மற்றவர்களும், மாற்றுக் கட்சிக்காரர்களும் உணர ஆரம்பித்து விட்டார்கள். அண்மையில், ஆந்திரா கவர்னராக இருந்து திட்டக்குழு உறுப்பினராக மாறும் திரு. தருவேதி அவர்களுககு ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. அதில் ஆந்திர அமைசசர் கோபால் ரெட்டியார் பேசும்போது கூறியதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இதுவரையில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. திட்டக் குழுவுக்கு நீங்கள் போன பிறகாவது தென்னாட்டுப் பொருளாதாரத் திட்ட வளர்ச்சியிலே கவனம் செலுத்துங்கள்" என்று கோபாலர் கூறியிருக்கிறார்.

சட்ட சபையிலே வடக்கு—தெற்கு என்று நாம் பேசும்போது 'வெறும் அடுக்கு மொழி' என்று கூறுகிறார், கள். உண்மையிலேயே இது அடுக்கு மொழிதான். அடுக்காததல்ல. 'அடுக்கும்' என்றுதான் கோபால ரெட்டியாரும் கூறினார். அவரையே கேட்டுப் பாருங்கள்—இப்படிக் கூறுவது அடுக்குமா அடுக்காதா என்பதைக் கூறுவார். இது வேடிக்கையல்ல—பொருளாதார உண்மை இந்த உண்மை இப்பொழுதுதான் நாட்டு மக்களிடம் குடியேறி வருகிறது.

அண்மையிலே, தா காஸ்டர் என்னும் பொருளாதார நிபுணர் சொன்னார்—'ரொம்ப காலமாகத் தென்னாடு பொருளாதாரத் துறையில் பின்னடைந்து கிடக்கிறது. தென்னாட்டை வாழ்விக்க ஒரு தனி நிதி ஒதுக்க வேண்டும்'—என்று! இதை, நாம் சொன்னால் கையாண்டி செய்கிறார்கள்! பி ஜே. தாமஸ் என்னும் பாராளு மன்ற உறுப்பினர் கூடச் சொல்லி இருக்கிறார்—வட நாடு வீங்குகிறது, தென்னாடுவளம்பெற வழி செய்யப்படவில்லை என்று!

காங்கிரஸ்காரர்கள் கடைசி வரையில் இப்படியே நம் கோரிக்கைக்குச் செவி சாய்க்காமல் இருப்பார்கள் என்று சொல்லிவிட முடியாது.

மரத்தில் ஏறியவன் மரத்திலேயே இருந்துவிட மாட்டான்; எப்பொழுதாவது கீழே இறங்கித்தான் ஆக வேண்டும்.

இதைப்போலவே—கோபுர உச்சியிலிருக்கும் ஆளும் கட்சியார் ஒரு நாளைக்கு கீழே இறங்கத்தான் போகிறார்கள்!

—அறிஞர் அண்ணா

விழலுக்கு இறைத்த . . .

✽ 2-ம் பக்கத் தொடர்ச்சி

பிறகு அரசாங்கம் அந்தக் கம்பெனியின் சொத்துக்களை யெல்லாம், தனக்கு வர வேண்டிய கடனுக்காக எடுத்துக் கொண்டது.

அப்படியிருந்தும் அரசாங்கத் திற்குப் பூரா தொகையும் வந்து சேர்ந்தபாடில்லை.

1955, டிசம்பர், 31-ம் தேதி வரை அரசாங்கத்திற்கு வந்து சேர வேண்டிய தொகை மட்டும் ரூ. 3 27 669

✽✽✽ அந்தத் தனிப்பட்ட கம்பெனியின் சொத்துக்கு உண்டான மதிப்புக்கும் மேலாக அரசாங்கம் கடனுதவி அளித்திருக்கிறது.

—இதை எந்த அடிப்படையில் செய்தார்கள்?

—இதற்கான பதில் தணிக்கையாளர் அறிக்கையில் இல்லை!

—தனிப்பட்டவர்களின் செல்வாக்கு அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மட்டுமின்றி பொதுமக்கள் தரும் வரிப் பணத்தையும் எவ்வளவு தூரம் பாதிக்குமென்பதற்கு இதுவும் ஓர் உதாரணம்!

✽✽✽ நம்முடைய அரசாங்கம் சில தொழிற்சாலைகளையும் நடத்தி வருகிறதல்லவா? அவைகூட செவ்வனே நடத்தப் பெறவில்லை.

உதாரணமாக 1957—ம் ஆண்டு சென்னை அரசாங்கத்து சோப்புத் தொழிற்சாலையில் தயாராகும் சோப்புக்களை விற்பனை செய்வதற்காக கல்கத்தாவில் ஒரு ஏஜண்ட் நியமிக்கப் பட்டார்.

ஆனால் அவர் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி ஒழுங்காக நடந்து கொள்ளவில்லை.

(1) 1955—56-ம் ஆண்டில் ரூபாய் ஐந்து லட்சத்திற்கு சோப்பு விற்பனை செய்வதாக ஒப்பந்தம். ஆனால் அந்த ஆண்டு நடைபெற்ற மொத்த விற்பனையோ ரூ 72 136 தான்!

(2) ஒப்பந்தப்படி பட்டியல் தொகையை அந்தக் கல்கத்தா கம்பெனி உடனுக்குடன் செலுத்திவிட வேண்டும். ஆனால் அது சில சமயங்களில் சுமார் ஒரு ஆண்டுவரைகூட தொகையை அனுப்பாமலிருந்திருக்கிறது.

(3) ரூ 14,733 மதிப்புள்ள சோப்புக்களை அந்தக் கல்கத்தா கம்பெனி ஒரு ஆண்டு கழித்துத் திருப்பி அனுப்பிற்று.

அப்படி திருப்பி அனுப்பப் பட்ட சோப்புகள் மிகவும் அழிந்த நிலையில் வந்து சேர்ந்தன.

—இவ்வாறெல்லாம் அந்தக் கல்கத்தா கம்பெனி ஒப்பந்தங்களை மீறியிருக்கிறது.

அப்படி மீறினால் அபராதம் கட்ட வேண்டும் என்றும் ஒப்பந்தத்திலே வற்புறுத்தப்பட்டிருக்கிறது!

—இருந்தும் அரசாங்கத்துச் சார்பில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.'

ஏன்?

கல்கத்தாவிலுள்ள கம்பெனி; ஆட்சிபீடத்தைத் தங்கள் கைகளிலே வைத்திருக்கிற வடநாட்டு ஸ்தாபனம்—என்கிற காரணத்தினாலா?

—அது அல்லவாம்!

ஏஜண்டுகளுடன் அரசாங்கம் சுமுகமாக உறவு வைத்துக் கொள்ள விரும்புவதாலேயே அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தார்களாம்!

பாவம், வியாபாரம் நடத்தத் தெரியாதவர்கள் அந்தத் துறையில் இறங்கி அரசாங்கத்திற்கு வரவேண்டிய லாபத்தை இப்படியெல்லாம் குறைத்திருக்கிறார்கள்!

—இப்போது சொல்லுங்கள்! இந்த சோக நாடகமும்; இதில் நடைபெற்ற அக்கிரமங்களையும் கண்டு உங்கள் மனம் புண்ணுகிறதா இல்லையா? °°

பிறைவானம் . . .

✽ 11-ம் பக்கத் தொடர்ச்சி

வடிவேலன் கண்விழித்தபோது கெஞ்சிய காட்சி...

"ஏன் தம்பி இப்படிப் பார்க்கிறாய்? நான்தான் புது டாக்டர்?" என்றார் உமாபதி!

"நான்...நான் ... பிழைத்துக் கொள்வேனா டாக்டர்?..."—உலர்ந்து போன உதடுகள் தட்டுத்தடுமாறி இந்த சொற்களை உதிர்த்த பின், அவன் சோர்ந்து போய் விட்டான்.

"அப்படியெல்லாம் கவலைப்படக் கூடாது! நான் எதற்காக இருக்கிறேன்? தூக்குடா கண்ணு!" என்றார் உமாபதி!

சிறுவன் கணநேரம் கண்மூடி மறுபடியும் திறந்தான். "சார்!... டாக்டர் சார்!...பெரிய பரிட்சை வருகிறதே; அதற்குள் பிழைத்துக் கொள்வேனா...நான்?..." என்றான் மறுபடியும்!

அன்று அவனை சமாதானப் படுத்திய உமாபதி இன்று சஞ்சலத்தோடு தவிக்கிறார்.

இப்போது அவரது கடமை என்ன?

இதோ, மறுபடியும் வந்துவிட்டாரே, அவர்!

"உமாபதி! வா இங்கே!..." என்று அழைத்தார் அவர், கொடூரமான குரலில்!

உமாபதி தன் தனி அறைக்குள் நுழைந்தார், உணர்ச்சியற்ற பிணமாக!

"நான் உன்னை வளர்த்துவிட்ட கடமைக்காகக் கேட்கிறேன்! தெரியுமா உனக்கு? தெருவிலே திரியும் நாய்கூட நன்றி மறப்பதில்லை, உமாபதி!..."

—உமாபதியின் கண்கள் குளமாயின!

"அதற்காக? ஐயையோ அப்பா! என்னை என்ன 'பாவம்' செய்யச் சொல்கிறீர்கள்? கடமைதானேயப்பா நான் கற்ற முதல் பாடம்...!"

"நானும் அந்தக் கடமையை— நன்றிக் கடனைத்தான் நீ முதலில் செய்ய வேண்டும் என்கிறேன்! அந்தக் கொடியவன்—என் நல்வாழ்வுக்குக் குறிபழித்தவன்— தனது ஒரே புதல்வனைப் பறிகொடுத்துப் பதற வேண்டும்! பைத்தியம் பிடித்தவனைப்போல் பாதை வழியே புலம்பித் திரிய வேண்டும்!..."

உமாபதி தவித்தார்!

"இந்தா, பிடி!" என்று அவன் கரத்தில் எதையோ நீட்டினார் அவர்.

"என்ன இது?..."

"விஷம்!...என் மானம் காக்க வேண்டிய மருந்து!...போ, அந்தப் புத்திகெட்டவனின் புதல்வனுக்குப் புகட்டு, மருந்தென்று சொல்லி...! நான் வருகிறேன்! கவனமிருக்கட்டும் உமாபதி; நாய்கூட நன்றி மறப்பதில்லை!..."

—அவர் போய் விட்டார்!

★

இரவு பத்து மணிக்குமேல் இருக்கும்! வழக்கமான அமைதியில் ஆழ்ந்து கிடந்தது மருத்துவமனை!

உமாபதியின் அறைக்குள் நுழைந்தார் அந்தப் பெரியவர்! மேசையில் முகம் கவிழ்த்து சாய்ந்து கொண்டிருந்தார் உமாபதி!

"என்ன உமாபதி! வருத்தமா? தவறு செய்து விட்டோமே என்ற வேதனையா?..." என்று சொல்லிக் கொண்டே அவனைத் தொட்டு உலுக்கினார் அவர்!

டாக்டர் எழுந்திருக்கவில்லை!

"உமாபதி!"—அந்தப் பெரியவரின் கதறல், மருத்துவமனையின் அமைதியைக் கிழித்துக் கொண்டு சிறிச்சிட்டது!

"ஏன் கதறுகிறீர்கள்? கடமை தவற விரும்பாத உங்கள் மகன்—தன் மனத்தைக் காத்துக் கொண்டு விட்டார்!..." என்று சொல்லாமல் சொல்லிக்கொண்டு கீழே உருண்டு கிடந்தது, அன்று மாலை அவர் தந்துவிட்டுச் சென்ற விஷமிருந்த—ஆனால் இப்போது 'காலி'யாகி விட்ட பாட்டில்!

★

அந்தக் கதறலையும், அதைத் தொடர்ந்து அங்கே ஏற்பட்ட குழப்பத்தையும் கவனியாது அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்தான், டாக்டர் உமாபதியால் உயிர் கொடுக்கப்பட்ட பெரிய பண்ணை மிட்டாதாரின், தங்கத் தம்பி வடிவேலன்!

—சொர்ணம்

பன்மொழிப் புலவர் பொன்விழா

★

பொதுச் செயலாளர் வேண்டுகோள்!

பெரியோர்களே! தோழர்களே!

வணக்கம். பன்மொழி பயின்று தேர்ந்த நல்லாசிரியரும், நற்றமிழ் வாழ—வளர அரும்பணிகள் பல ஆற்றி வருபவரும். சீர்திருத்தச் செம்மலும், பகுத்தறிவு மணம் எங்கணும் பரப்பி வருபவரும், பொதுநலத் துறைக்கே தம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துச் செயலாற்றி வருபவரும், நேரிய கொள்கைகளுக்காகப் பரிந்து பேசவும்—போராடவும்—தடியடி தாங்கவும்—சிறை புகவும் துணிந்த செயல் வீரரும், திராவிட முன்னேற்றக் கழகத்திடத்து நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு உழைத்து வருபவரும் ஆன பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிறார்கள் என்பது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

பன்மொழிப் புலவரின் பொன் விழாவைப் பெருமைக்குரிய வகையிலும், பூரிப்புக் கொள்ளும் முறையிலும் சிறப்பாக நடத்த வேண்டும் என்பது நண்பர்கள் பலரின் வேணவாவாகும். அவரது பொன் விழாவைக் கொண்டாடி நாம் மகிழ்ச்சியடைவதோடு மட்டுமல்லாமல், அவரையும் நிலையாக மகிழ்விக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாகவும் இருக்கிறோம். பொதுவாகப் புலவர் பெருமக்களைப் பீடிக்கின்ற வறுமை அவரைப் பெருமளவுக்குப் பிடித்து வாட்டி வதைக்கிறது. அந்தக் கொடுமையினின்றும் அவரை விடுவித்து, மகிழ்ச்சிகொள் அமைதியான வாழ்வில் அவரை ஈடுபடுத்த வேண்டியும், அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் பயக்க வேண்டியும் அவருக்குச் சிறப்புக்குரிய வகையில் பண முடிப்பைப் பரிசாக வழங்க வேண்டும் என்று நண்பர்கள் பலரும் விரும்பியுள்ளனர்.

பன்மொழிப் புலவர் பொன்விழாக் குழு ஒன்றை உருவாக்கி, அதில் அன்பர்கள் பலரையும் உறுப்பினர்களாக ஆக்கிடும் பொறுப்பினை கண்ணதாசன் அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

விழாக் குழுவின் பொருளாளராக இருந்து பணியாற்ற அண்ணா அவர்கள் இசைவு தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதி தந்து உதவுவோர்,

சி. என். அண்ணாதுரை, 'நம் நாடு'
24, சூரியநாராயணச் செட்டித் தெரு,
இராயபுரம், சென்னை—13.

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், தமிழார்வங் கொண்ட பிற அன்பர்களையும் பன்மொழிப் புலவரின் பொன்விழா முயற்சி வெற்றியுற பேருதவி புரியுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,

24—7—57
'அறிவகம்'
சென்னை—13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. க.

கதை எழுதுவது கெட்ட செயலாம்! திருமங்கலத்தாரே; திரும்பிப்பாரும்!

" கதை எழுதிப் பிழைப்பவர்கள்!'

—திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களைப் பார்த்து அர்ச்சனை செய்தார் மாஜி மந்திரி ராஜாராம் (நாயுடு)!

ஆனால் அதே நேரம் அவர் ஓர் உண்மையை மறந்து விட்டார்.

சென்ற திங்கள் குடியரசுத் தலைவர் சிறந்த படங்களுக்கான பரிசுகளை வழங்கினார்!

அப்போது முதல் பரிசைப் பெற்ற சினிமாப் படம் எது தெரியுமா?

'காபூலிவாலா' என்கிற வங்காளப் படம்!

அதன் கதையை யார் எழுதியது?

ரவீந்திரநாத் தாகூர். தாகூர் யார்?

—காங்கிரஸ்காரர்களால் தேசியக் கவி என்று புகழப்படுபவர்! இந்திய உப கண்டத்துக்கே தேசிய கீதம் வழங்கியவர்!

—அத்தகைய பெருமைக்குரிய ரவீந்திரநாத் தாகூரே கதை எழுதியிருக்கும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கதை எழுதுவதால் என்ன தவறு நேர்ந்து விடும்?

அது மட்டும்தானா? பண்டித நேருவே ஒப்புக்கொண்டிருக்கிறார், தான் எழுதிய புத்தகங்கள் விற்பனையாவதால் தனக்குக் கிடைக்கிற 'ராயல்டி'த் தொகைதான் தனது பிரதான சம்பாத்தியம் — என்று!

வேண்டுமானால் ராஜாராம் (நாயுடு) போன்றவர்கள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்—பண்டித நேரு ஒன்றும் உங்களைப்போல கதைகள் எதுவும் எழுதவில்லையே—என்று!

ஆனால் அவரும் அவரைச் சார்ந்தவர்களும் வெட்கித் தலைகுனியும் வேதனைச் செய்தி ஒன்றும் இருக்கிறது!

—பண்டிதருடைய புத்தகங்கள் ஆங்கிலத்திலே வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் சில தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன!

இதில் முக்கியமான செய்தி என்ன தெரியுமா?

அவர் எழுதிய 'சுய சரிதம்' என்கிற புத்தகம் பாரசீக மொழியிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

அதே போலவே அவர் வரைந்த 'உலகச் சரித்திரம்' என்னும் ஏடு அராபிய மொழியிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது!

—நமக்குக் கிடைத்த செய்தி இது மட்டும்தானென்றால் நாமும் காங்கிரஸ் நண்பர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சிக் கூத்தாடியிருப்போம் — நல்ல சிந்தனைக் கதிர்கள் மொழி தாண்டி வேறு நாடுகளிலும் பரவுவது வரவேற்கத் தகுந்ததல்லவா?

—இதில் வேதனை என்னவென்றால் இந்த இரண்டு புத்தகங்களும் வேற்று மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதற்கு அரசாங்க நிதியிலிருந்து—பொது மக்களது வரிப் பணத்திலிருந்து மான்யம் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

—அப்படியானால் அன்னிய மொழியில் மொழி பெயர்க்கப்படும் எல்லா நூல்களுக்கும் அரசாங்கம் மான்யம் வழங்கி உதவியளிக்கிறதா?

—அப்படி எல்லோருக்கும் மான்யம் வழங்கப்பட்டு; அதே உதவி இந்திய உப கண்டத்தின் பிரதமருக்கும் கிடைத்திருந்தால் அதை ஜனநாயகத்தின்பாற்பட்ட செயலென்று போற்றியிருக்கலமே!

—ஆனால் மான்ய உதவி எல்லா மொழி பெயர்ப்பு நூல்களுக்கும் கிடைப்பதில்லையாம்!

—ஜவகர்லால் நேரு என்கிற தனிப்பட்ட யாரோ ஒருவர் எழுதிய நூல்களை மொழி பெயர்க்கிறார்கள்—என்றால் கூட இந்த உதவி கிடைத்திருக்காது!

ஆனால் ஜவகர்லால் நேரு பாரதத்தின் பிரதம மந்திரி; அதனால்தான் அவர் எழுதிய புத்தகங்கள் மொழி பெயர்க்கப்பட்டு விற்பனையாவதற்கு அரசாங்கக் கஜானாவிலிருந்து மான்ய உதவி!

—இதை நாம் கூறவில்லை. டெல்லிப் பாராளுமன்றத்திலே ஆந்திராவைச் சேர்ந்த சோஷலிஸ்ட் உறுப்பினர் பி. வி. ஜி. ராஜூவே கேட்டிருக்கிறார்—பிரதமரை முன்னால் வைத்துக் கொண்டே!

"இது நாட்டிலே ஜனநாயகப் பண்பாடு அழிந்து வருவதைக் காட்டவில்லையா? தனி நபர் வழிபாடு இங்கும் இருப்பதையும் உணர்த்தவில்லையா?" —என்றும் அவர் கேட்டிருக்கிறார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாவது கதைகள் எழுதி, அதைத் தங்கள் சொந்த முயற்சியில் விற்பனை செய்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களோ இது போன்ற பொது மக்கள் பணத்திலிருந்து மான்யம் பெறுவது போன்ற இழிதகை வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள் — என்பதை இனியாவது மாஜி கனம் ராஜாராம் (நாயுடு) அவர்கள் உணரட்டும்!

கதை எழுதுவது கண்யமற்ற தொழிலாயிருந்தால் இலக்கியத்திற்காக என்று உலகப் புகழ் பெற்ற நோபல் பரிசை ஏன் தருகிறார்கள்?

கதையை சினிமாவாக்குவது தரங்கெட்ட செய்கையாயிருந்தால்; ஏன் ரவீந்திரநாத் தாகூருடைய கதையை சினிமா எடுக்க அனுமதிக்கிறார்கள்? ஏன் அதற்குப் பரிசும் தருகிறார்கள்?

—திருமங்கலத்துத் திருவாளரே! அடுத்தமுறை வசைமாரி பொழிவதற்குமுன் நன்றாகச் சிந்தித்துப் பாரீர்!

அந்தோ பரிதாபம்!

தபால் தந்தி ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைத் தடுப்பதற்குப் பாலும்; பண்டிதரும் அவரது கூட்டாளிகளும் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதைத்தான் 'சங்கர்ஸ் வீக்லி' இப்படிச் சித்தரிக்கிறது.

உயிர் ஓவியங்கள்

ஆசிரியர் : கவிஞர் கண்ணதாசன்

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் அவ்வப்போது 'தென்றல்' இதழில் எழுதிய சிறுகதைகள் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. புலிகொன்று வாழ்ந்த தமிழனின் சிறப்பியல்புகளை குறிக்கோளாக வைத்து; வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு; தேமதுரக் கற்பனைத் தூரிகையால் இலக்கிய வர்ணக் கலவையோடு உயிரோவியம் தீட்டியிருக்கிறார், கவிஞர்!

'ஈழங்கொண்ட இராசாதிராசன்' ஒரு காதல் ஓவியம்! 'ஏக வாசகன் குலோத்துங்க சோழ வாணகோ வரையன்'—நாட்டுப் பற்றின் உன்னதப் படப்பிடிப்பு! 'நல்லியக் கோடன்' ஒரு கலைப்பூங்கா! 'பூப்பல்லக்கு'—ஒரு தத்துவ விளக்கம்! வேறென்ன கூறவேண்டும் நூலைப்பற்றி!

கிடைக்குமிடம் : விலை. ரூ 1—0—0

பி. இராமசாமி அண்டு பிரதர்ஸ்,
முத்துமாளிகை, சென்னை-4

தமிழர் இனிய வாழ்வு

இது ஒரு அழகிய தொகுப்பு நூல். மதுரை தமிழ்ச் சங்கப் பொன்விழா மலரில் வெளிவந்த கட்டுரைகளைக் கொண்டது. 'தமிழக மகளிர்'; 'தமிழர் காதல் வாழ்வு'; 'தமிழர் சமூக வாழ்க்கை'; 'தமிழர் ஆடை அணிகள்'; 'தமிழர் நாகரிகம்'; 'பழந்தமிழர் சமயம்'; 'தமிழர் மருத்துவக் கலை'—ஆகிய எட்டு ஒப்பற்ற கட்டுரைகள் இதில் இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொன்றும் இலக்கியம் புகுந்து; இருள் கிழித்து; ஆராய்ச்சி ஒளி கொண்டு தேடித் தரப்பட்டிருக்கிற மணிகள்! தமிழர் இல்லந் தோறும் இருக்க வேண்டிய புத்தகம்!

கிடைக்குமிடம் : விலை. ரூ 1—50

தமிழகம், 59, பிராட்வே, சென்னை-1

கொண்டியூர் மர்மம்

ஆசிரியர் : வி.கரு. ராமநாதன்

கதையின் தொடக்கத்தில் — முதல் அத்தியாயத்திலேயே வயதான இரு தம்பதிகள் கொல்லப்படுகிறார்கள். அடுத்த ஒவ்வொரு அத்தியாயத்திலும் துப்பறியும் சிங்கமான வெங்குவும் இன்ஸ்பெக்டர் கார்வண்ணனும் துப்பறிகிறார்கள். கதையிலே ஓரளவு விறுவிறுப்பும் காணப்படுகிறது. ஆனால் இறுதியான பன்னிரண்டாம் அத்தியாயம் பெருத்த ஏமாற்றம்! காரணம், நாம் எதிர்பாராத ஒருவன் திடீரென்று புனைந்துத் தானே கொலைகாரன் என்கிறான். நம்பவே முடியவில்லை. என்றாலும் கதை முடிந்து விடுகிறதே!

வெளியிட்டோர் : விலை ரூ. 1–50

அருணோதயம், சென்னை-14,

அழகு நடையும்; அருமையான கதையும்;
ஆழ்ந்த கருத்துக்களும் கொண்ட உயிரோவியம்!

பி. சி. கணேசன், பி. எஸ்ஸி., பி. டி.

தீட்டிய

அபிசீனிய அடிமை

விலை. ரூ. 1—0—0

(தனிப்புத்தகம் பெற விரும்புவோர் ரூ.1—4—0 அனுப்பவும்.)

★

முத்துவேல் பதிப்பகம்,
77, மதுரை ரோடு. திருச்சி—8

குருநாதர் கூற்றும், சீடரின் சீற்றமும்!

"நீங்கள் நாசவேலைக்காரர்கள் என்று மந்திரி சுப்பிரமணியம் சொன்னார். இந்த நேரத்தில் உங்களுக்கு ஒரு இரகசியத்தைச் சொல்லுகிறேன்.

தேர்தல் நேரத்தில் இராசகோபாலாச்சாரியார் என்னைச் சந்தித்துப் பேசியபோது என்னை ஒன்று கேட்டுக் கொண்டார்—'எங்களிடம் பிராமணத் துவேஷம் கிடையாது' என்று இந்த நேரத்தில் ஒரு அறிக்கை விடுங்கள்; இந்த ஒரே ஒரு காரியத்தை நீங்கள் செய்தால் போதும்—என்று! அதற்கு நான் சொன்னேன்—எங்களிடம் எப்பொழுதுமே பிராமணத் துவேஷம் இருந்ததில்லையே! இந்த நேரத்தில் நான் இவ்வாறு அறிக்கை விடுத்தால் நாங்கள் இதற்கு முன்னால் பிராமணத் துவேஷிகளாக இருந்ததாக அல்லவா கருதப்படுவோம் — என்றேன். ஆச்சாரியார் பெரிய மனிதர்; அனுபவம் நிறைந்தவர் அல்லவா? எனவே அவர், 'அதுவும் நியாயந்தான்' என்றார்.

மந்திரி சுப்பிரமண்யம் சொல்வது போல, நாங்கள் எப்பொழுது நாச வேலையில் ஈடுபட்டோம்?

'இனி ஒழுங்காக நடந்துகொள்' என்று மாஜிஸ்திரேட் ஒருவனைப் பார்த்துச் சொன்னால், என்ன அர்த்தம்? ஏற்கனவே பல குற்றங்கள் புரிந்து வந்தவன் என்பதுதானே! 'நாச வேலையை 10 வருடத்துக்கு நிறுத்தி வை' என்று அவர் சொல்லலாமா? 10 வருடம் என்றால், அதற்குப் பிறகு நாச வேலையை செய்யலாம் என்றுதானே பொருள்?

—அறிஞர் அண்ணா

சுழல் விளக்கு . . .

❋ 4-ம் பக்கத் தொடர்ச்சி

மிச்சை அளவாவது 'தியாகம்' செய்யும்படிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்கிறது!

—இந்த நிலைமையில்தான் அதன் தவப் புதல்வர் ஒருவர் அரசாங்கத்தின் வரிப் பணத்திலிருந்து நாள் ஒன்றிற்கு 115 ரூபாய்கள் கொடுத்து; குளிர் சாதனம் பொருத்தப்பட்ட பெரிய அறையிலே தங்கியிருந்திருக்கிறார்!

—இதே பம்பாய்த் திருநகரில்; டாட்டாவின் தாஜ்மகால் ஓட்டல் இருக்கும் செல்வப் பட்டணத்தில்தான் அரசாங்கமே ஏற்று நடத்திவரும் 'மெஜஸ்டிக் ஓட்டலும்' இருக்கிறது!

அந்த ஓட்டலில் ஒரு அறையின் ஒருநாள் வாடகை 9 ரூபாய்கள்தான்!

—ஆனால் நிதியமைச்சர் அந்த விடுதியில் தங்கி அரசாங்கத்து முயற்சிக்கு ஆதரவளிக்கவில்லை!

எந்த முதலாளிகளிடமிருந்து பணத்தைப் பிடுங்குவதாகச் சொல்கிறாரோ, அதே முதலாளி நடத்தும் ஓட்டலில் நாளொன்றுக்கு பொது மக்களது வரிப் பணத்திலிருந்து 115 ரூபாய் கொடுத்து; அவர்களது முயற்சிக்கு ஊட்டமளித்திருக்கிறார்!

கசாப்புக் கடைக்காரன் ஆடுகளுக்கு நிறைய தீனி கொடுத்து அவைகளைக் கொழுக்க வைப்பான்.

எதற்காக?

அவைகளை வெட்டிக் கொன்று அதிக மாமிசம் பெறுவதற்காக!

'நானும் அப்படித்தான் செய்தேன்! நாளொன்றுக்கு 115 ரூபாய் வாடகை கொடுத்து; டாட்டாவுக்கு அதிக லாபத்தைச் சேர்த்து பிறகு அவர்களிடமிருந்து அதிக வரிகளைப் பெறுவேன்!'

—இப்படிக்கூட நமது நிதியமைச்சர் விசித்திர வியாக்யானம் கூறலாம்!

—இதைக்கூட பெரியார் அவர்கள் கரகோஷம் செய்து ஆதரவு காட்டலாம்!

ஆனால் ஒன்று மட்டும் மறைக்க முடியாத உண்மை—இன்றைய காங்கிரஸ் ஆட்சியில் மந்திரி வேலையைப் போல வேறு லாபகரமான தொழில் எதுவுமே கிடையாது! ஃ

சந்தா விபரம்

உள் நாடு
ஆண்டு சந்தா 6—50
ஆறு மாதம் 4—00

வெளி நாடு
ஆண்டு சந்தா 7—50
ஆறு மாதம் 4—50

கடிகாரத்தின் 'டிக், டிக்' என்ற ஒலியைத் தவிர அங்கே சிறு ஓசையும் எழும்பவில்லை—பயங்கரமான அமைதி சூழ்ந்து கிடந்தது.

வரிசை வரிசையாகக் கிடந்த கட்டில்களில்—தூய வெள்ளை நிறப் படுக்கைகளில்—படுத்திருந்த நோயாளிகள், இருப்பு நெஞ்சங்களையும் இளகவைக்கும் காட்சிப் பொருள்களாகத் தோன்றினர்கள்!

அங்குமிங்கும் புரண்டு, உடலை அலைக்கழித்துக் கொண்டிருந்தார்கள் சிலர்!

திறந்த விழி மூடாமல், எங்கேயோ பார்வையைக் குத்தி, பைத்தியம்போல் கிடந்தனர் மற்றும் சிலர்!



சாவை எதிர்நோக்கி, 'ஐயோ, தீர்ந்ததே என் வாழ்வு' என்று கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தனர், ஓரிருவர்.

எதிர்கால நல்வாழ்வு எனக்காகக் காத்திருக்கிறதே — என்ற இன்ப நினைவில் வேதனையை அனுபவித்துக்கொண்டிருந்தனர் உலகத்தைவிட்டு விலக விரும்பாத ஒரு சில ஆசைக்காரர்கள்!

இவர்களுக்கு மத்தியிலேதான் நம்முடைய கதையின் காதாநாயகன்—அல்ல; அல்ல; 'காதாபாலகன்' செயலற்ற பொம்மைபோல் அசைவற்று-உணர்வற்ற கட்டைபோல் உணர்ச்சியற்று—உயிரற்ற பிணம்போல் பேச்சற்று—மூச்சற்று கிடந்தான்!

அவன் விழிகள் திறக்கின்றனவா—உதடுகள் அசைகின்றனவா—உயிர் நிலைத்திடத் துடிக்கின்றதா—என்ற சஞ்சலத்தில் பலர் இருக்கலாம்!

ஆனால்...அவன் உயிர் மூச்சு ஓரேயடியாகக் காற்ரேடு கலந்துவிடக் கூடாதா என்ற சபலத்தில் துடித்துக்கொண்டிருந்தது ஒரு ஜீவன்! நான் 'சாவு அரக்கனை'க் குறிப்பிடுகிறேன் என்றுதானே எண்ணுகிறீர்கள்! அல்ல; அல்ல! அவனுக்கும் அண்ணான்—அவனினும் கொடிய நெஞ்சு படைத்தவர்—ஆலகால விஷத்தை நெஞ்சிலே, பேச்சிலே, மூச்சிலே, செயலிலே தேக்கிக் கொண்டிருப்பவர் ஒருவர் இருக்கிறார்!

அந்த உதவாக்கரையை அறிமுகப்படுத்திக் கொள்வதற்கு முன்பாக—நமது 'கதாபாலக'னின் விழிகள் திறந்துகொள்ளாதா என விழிகள் மூடாமல் கவனித்துக் கொண்டிருக்கும் மற்றொரு உருவத்தை சந்திப்போம்.

அந்த அறையின் மத்தியில் கிடந்த நாற்காலியில், கன்னத்திலே கை புதைத்து—விழிகளை அந்தச் சிறுவனின்மேல் பதித்து—எண்ணங்கள் எண்ணற்றவை நெஞ்சிலே குதிக்க—'ஏதாகுமோ; என்னவாகுமோ' என்ற திகிலோடு அமர்ந்திருந்தார் அவர்!

யார் அவர்?

நல்லவர்—இளைஞர் — கைராசிக்காரர்—மென்மையானவர் — தாய்மையானவர்—ஏழைகளுக்கு இரங்கும் இதயம் கொண்டவர்—என்றெல்லாம் ஊராரால் போற்றப்படுபவர்—புகழினைப் பெறுபவர்—நம் கதையில் முக்கிய கவனத்திற்குரியவர்—அவர்தான் ஊரின் புதிய மருத்துவர்—டாக்டர் உமாபதி! இன்னும் சொல்லப்போனால் கடவுளையும் எதிர்த்துப் போரிட்டு வெற்றி வாகை சூடும் வீரர் அவர்! புரியவில்லையா?... 'உம்...ஐயோ ... அவ்வளவுதான்!' என்று நம்பிக்கை யிழந்த எத்தனையோ நோயாளிகளை—மரண முகடை நெருங்கிவிட்ட எத்தனையோ உயிர்களை—'யமதர்மராஜ'னோடு போரிட்டு—மருந்தென்ற பாணம் தொடுத்து — அவனது 'பாசக் கயிற்றி'லிருந்து மீட்டுவந்து — ஊராரின் பாசம் கலந்த களிப்பைக் காணிக்கையாகப் பெற்றிருக்கிறாரே. அவர்!

அவர்தான் இப்போது அரசமரத்துப் பிள்ளையார்போல அமர்ந்திருக்கிறார்! ஆனால், உள்ளமும் உடலும் கல்லாகிவிடவில்லை; கல்லினும் கொடிய நெஞ்சு படைத்த ஒருவர் அவர் உள்ளத்திலே வீசிவிட்டுப் போன மோசக் கருத்துக்கள்தான்...அதோ, அவர் நெஞ்சிலே 'பேய்' உருவெடுத்து, சதிராடி, சஞ்சலத்தைப் பாய்ச்சி, அமைதியைப் பறித்து, வெறி பிடித்துச் சிரிக்கிறது!...

"உமாபதி! என் கண்ணே!...நீ பரிட்சையில் வென்று, என் பக்கத்திலேயே வந்து விட்டாயே! எனக்கு எவ்வளவு களிப்பு தெரியுமாடா?..."-இப்படித்தான் அன்று பேசிக்கொண்டு வந்தார் அவர்.

"ஆகா! வாருங்களப்பா! வாருங்களப்பா!...நான் இங்கு வந்ததும் முதலில் நம் வீட்டுக்குத்தான் வரவேண்டும் என்று நினைத்தேன். எனக்கு எதையும்விட நீங்கள்தானே முக்கியம்! அனாதையான என்னை ஆதரித்து—அன்போடு வளர்த்து-படிக்கவைத்து - இன்று 'டாக்டர்' என்று மதிப்போடு உலவி விட்டது நீங்கள்தானே! நான் சாகுமளவுக்கும் உங்கள் காலடியிலேகிடந்து நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேனே!"

டாக்டர் உமாபதி கண்களிலே நன்றி தோன்ற—பேச்சிலே மரியாதை தெரிய-ஓடிவந்து 'அவரை' வரவேற்றார்! ஆமாம்; அவர் உண்மையில் அந்தப் பெரியவருக்குக் கடமைப்பட்டவன்தான்! பிரசவ அறையிலேயே தாயை இழந்து—பின் இரண்டொரு ஆண்டுகளில் தந்தையையும் பறிகொடுத்து—உலகத்தின் அகண்ட கரத்திலே அழுது புரண்டு கொண்டிருந்தபோது நேசக் கரம் நீட்டியவரல்லவா, அவர்! தூரத்து உறவு என்ற பாச உணர்ச்சியல்ல அதற்குக் காரணம்; குழந்தையின்றி குமுறிக் கொண்டிருந்த உள்ளத்திற்கு அந்தச் சிசு சாந்தி அளிக்காதா என்ற சபலம்தான்!

சிறுவன் உமாபதி அவரது அன்பிலே வளர்ந்து—அறிவால் உயர்ந்து—"தங்கத்தம்பி" என்ற புனைப் பெயரை பள்ளியிலே பெற்று—அவருக்கும், பள்ளிக்கும், ஊருக்கும் நல்லவனாக ஆகிவிட்டான். பெருகி வந்த அவனது கல்வி வேகத்தை அணையிட்டுத் தடுக்க விரும்பாத அவர், அவனைக் கல்லூரிக்கு அனுப்பினார். மருத்துவம் படிக்க ஆவன செய்தார்!

அதன் எல்லைதான் இதோ, இன்று மாணவன் உமாபதி, டாக்டர் உமாபதியாக வளர்ந்த ஊருக்கே மருத்துவராக வந்திருக்கிறான். அப்படி அவனது வாழ்க்கை வெற்றிக்குக் காரணமானவராயிற்றே அவர்—அவரை ஓடிச்சென்று வரவேற்று—சிந்தைக் குளிரப் பேசியதில் வியப்பென்ன இருக்க முடியும்!

"ஆமாம், உமாபதி! நீ ரயிலை விட்டு இறங்கியதும் வீட்டுக்கு வராததில் எனக்கு எத்தனை கோபம் தெரியுமா?"

உமாபதியின் முகத்தில் கவலைக் குறிகள் தோன்றின. ஆமாம், தன் அச் செய்கை மிகப் பெரும் தவறானது என்றே அவன் கருதினான். "மன்னித்து விடுங்கள் அப்பா! நான் ஓடிவந்து உங்கள் காலிலே விழ வேண்டுமென்றுதான் நினைத்தேன்! ஆனால்... என்னை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் நோயாளிகளை நினைத்தேன்...என்னையும் மீறி இங்கே வந்துவிட்டேன். உங்கள் அன்புக்குரியவன் கடமையிலும் குறியாக இருக்கிறான் என்பது உங்களுக்கும் பெருமைதானே!" என்றான்.

"ஆமாம் உமாபதி!...இங்கே பெரிய பண்ணை மிட்டாதாரின் மகன் ஒருவன் 'நிமோனியா' சுரத்தால் பீடிக்கப்பட்டு வந்திருக்கிறானே தெரியுமா?..."

"தெரியும் அப்பா! அந்தத் தம்பியின் நிலை கவலைக்கிடமாகத்தான் இருக்கிறது!..."

"என்ன? அப்படியா?..."

"ஆமாம்! ஆனால் நான் விட்டு விடுவேனா? அந்தத் தங்கத் தம்பி இந்தச் சிறு வயதில் சாகலாமா அப்பா? நீங்களே சொல்லுங்கள்... அந்த மிட்டாதார்கூட உங்கள் நண்பராயிற்றே! இருவரும் கூட்டு வியாபாரம்கூட செய்தீர்களே அன்று!......நான் எப்படியாவது உங்கள் ஆத்ம நண்பரின்..."

"ஆத்ம நண்பன்!...உமாபதி! அந்தக் காலம் மலையேறி விட்டது! அந்த ஆத்ம நண்பன்தான் ஆபத்தான நச்சுப் பாம்பாக மாறி என்னைத் தீண்டி விட்டான்!......நான் கத்திக் கதறியிருக்கிறேன் தம்பி; செத்துப் பிழைத்திருக்கிறேன்!..."

"என்ன சொல்லுகிறீர்கள்...?"

"ஆமாம் உமாபதி! வியாபாரத்தில் இணைந்திருந்த எங்களை இரு துண்டாக வெட்டிப் பிரித்து விட்டதடா, அந்தப் பாவியின் நயவஞ்சக நெஞ்சில் தோன்றிய பேராசை! அதனால் அவன் நிறைய பொருளை மட்டும் சம்பாதித்துக் கொள்ளவில்லை; என்னை ஏமாற்றி-வஞ்சித்து—துரோகப் படுகுழியிலே உருட்டித்தள்ளி—ஒரு பயங்கரமான பரம விரோதியையும் சம்பாதித்துக் கொண்டு விட்டான்! அன்று முதல் காத்திருக்கிறேன் தம்பி; காலம் வராதா அவனைப் பழி வாங்க என்று!"

—அவரது கண்களில் இப்போது அனல் பறந்து கொண்டிருந்தது. உமாபதியின் முகத்திலே ஒரே கலக்கம்!

"நான் காத்துக் கிடந்த அந்தக் காலம் இப்போது வந்து விட்டது உமாபதி; அந்தப் பாதகனின் ஒரே பாலகனுக்கு வந்திருக்கும் வியாதியின் மூலம்!..."

"என்ன?..."—துடித்துக் கேட்டார் டாக்டர் உமாபதி!

பழி வாங்கும் எண்ணம் நெஞ்சிலே உந்தித் தள்ள—தணல் தகிக்கும் கண்களிலே வெறி சதிராட—உமாபதியின் விழிகளை ஊடுருவிப் பார்த்துக் கொண்டே அவரை நோக்கி மெள்ள நடந்து வந்தார் அந்தப் பெரியவர்!

உமாபதி பின் வாங்கினார்.

"உமாபதி!... அந்தச் சிறுவன் பிழைப்பது கடினம் என்று சொன்னாயல்லவா?..."

"ஆமாம்; சொன்னேன்!.."

"ஆனால் அவனைப் பிழைக்க வைக்கப் போராடுவேன் என்றும் சொன்னாயல்லவா?..."

"ஆமாம்; சொன்னேன்!..."

"இப்போது கொஞ்சம் நீ பின் நோக்கி நடந்து செல்ல வேண்டும், உமாபதி! அன்றெல்லாம்—நான் உனக்கு ஆதரவளித்த போதெல்லாம்—அடிக்கடிப் புலம்புவாயே; 'நான் உங்களுக்கு என்ன நன்றி செலுத்தப் போகிறேன்' என்று சொல்லுவாயல்லவா?..."

"ஆமாம்; சொன்னேன்!..."

"மகனே! நீ எனக்கு அந்த நன்றியைச் செலுத்த வேண்டிய நல்ல காலம் இப்போது உன்னையும் என்னையும், அந்த உன்மத்தனையும் தேடிக்கொண்டு வந்து விட்டதடா கண்ணே!..."

"ஐயையோ! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று அலறினார் டாக்டர் உமாபதி!

அவரது புலம்பலைத் தொடர்ந்து "புரிந்து கொள்ளவில்லையா, புதல்வனே! "அப்பா" என்று என்னை நீ அழைக்க அனுமதித்தேன்; பெற்றவனினும் மேலாக பெரும் பேற்றை அடையச் செய்தேன்; இன்று நீ செலுத்த வேண்டிய நன்றிக்காக வந்திருக்கிறேன், தம்பி!" என்று அவனை நெருங்கினார்; அவர்!

அருகே ஆபத்து வருகிறது என்று நினைத்தார் டாக்டர்!

நெருங்கிய அவர் டாக்டரின் செவியிலே ஏதோ ஓதினார்; பழுக்கப் பழுக்கக் காய்ச்சிய ஈயக்குழம்பைச் செவியிலே ஊற்றியதுபோல உணர்ந்து "ஐயையோ" என்று என்று அலறிக் குதித்தார் டாக்டர் உமாபதி!

★

...இதோ, அந்தப் பாலகனின் படுக்கையிலிருந்து பார்வையை நகர்த்தாத உமாபதியின் நெஞ்சிலே அந்த நிகழ்ச்சி தோன்றிய போது ஒரு கணம் திடுக்கிட்டார்.

அதே கணம்...அன்று அந்தச் சிறுவன் — பண்ணையாரின் மகன்

8-ம் பக்கம் பார்க்க

குறள்பித்தன், காரைக்குடி

(?) "எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

— இந்தக் குறளை விளக்க ஒரு உண்மைக் கதை கூற முடியுமா உம்மால்?

இதோ கூறுகிறேன்; ஒரு நாட்டில் ஒரு பாட்டெழுதும் வித்துவான் இருந்தாராம். அவருக்கு நிதி திரட்டிக் கொடுக்க ஒரு மேதை முழு முயற்சி எடுத்துக் கொண்டு அதற்காகத் தன் தந்தையின் விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டாராம்! இருபதாயிரம் ரூபாய்க்குமேல் நிதி சேர்த்து பெரிய விழாக் கொண்டாடி வித்துவானை சிறப்பித்தார்களாம்! நிதியின் உதவியால் தன் கதியை உயர்த்திக் கொண்ட வித்துவ சிரோன்மணி, நிதி சேகரித்த நல்லவரை நாள்தோறும் வசைபாடத் துவங்கினாராம். ஊரெல்லாம் வேதனையோடு பேசினார்கள்; நன்றிகெட்ட மனிதர் என்று! அதைத் தெருவழியே போன வள்ளுவர் கேட்டுக் கொண்டே போனார். வீட்டுக்குப் போனதும் ஒரு குறளை எழுதி முடித்தார். அதுதான் நீங்கள் குறிப்பிட்டுள்ள குறள்! போதுமா கதை!

கே. அருணகிரி, தண்டையார்பேட்டை

(?) 'காந்தீயம் இப்போது எப்படி பயன் படுத்தப்படுகிறது?

உலக அரங்கில் பண்டித நேருவை உயர்த்திக் காட்டும் ஏணியாக—உள் நாட்டில் மக்கள் வெறுப்பைக் கட்டிப் போட்டு—அவர்கள் வாயைத் தைத்து விடும் 'மந்திர சக்தி மிக்க மாயப் பொரு'ளாக!

கருப்பையன்; ஈரோடு

(?) பண ஆசையை எதற்கு ஒப்பிடலாம்?

தாடிக்கு! வெட்ட வெட்ட வளர்ந்து கொண்டே இருக்குமல்லவா, அது!

மணிவண்ணன், ராயப்பேட்டை, சென்னை

(?) 'தி. மு. க.'வினர் பேச்சை விலைக்கு விற்று பணம் சம்பாதிக்கிறார்கள்', என்று காங்கிரசார் குற்றம்சாட்டுகிறார்களே; என்ன அக்கிரமமான பேச்சு இது?

மழலை—மன்னிப்பீர்!

சேகவீர பாண்டியன்; திருநெல்வேலி

(?) பெரியார்—காமராசர் உறவு என்ன இப்படி ஆகிவிட்டது?

மண்பாண்டம் கல்லின் மீது பட்டால் என்ன; அல்லது கல் மண்பாண்டத்தின்மீது பட்டால் என்ன? உடைவது என்னவோ மண்பாண்டம் தானே!

மு. ப. சேந்தில்வேலன்; சிங்கம்புணரி

(?) பத்திரிகை உலகம் ஏன் இப்படி சீரழிந்து கொண்டு வருகிறது?

கடலில் கட்டை மிதக்கிறது; இரும்பு அமிழ்கிறது. இதனால் கடலுக்கு மிதக்க வைக்கும் சக்தியும், உள்ளே அமிழ்த்தும் திறனும் உண்டென்பது நிச்சயமாகிறது. ஆனால் கட்டைக்கு மேலே மிதக்கும் நல்ல குணம் இருக்கிறது; இரும்புக்கு அந்த குணம் இல்லை! அதனால் கடலைப்போய் பழிசொல்ல முடியுமா? நண்பரே நீங்கள் குறிப்பிடும் பத்திரிகை உலகத்தையும் இந்தக் கடலோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்!

சே. நல்லையன், நாமக்கல்.

(?) மற்ற திட்டங்களை குறை கூறி 'குடகனாறு திட்டம்' தேவை என்கிறீர்களே, அந்த மற்ற திட்டப் பகுதிகளில் உள்ள மக்கள் என்ன நினைப்பார்கள்?

குடகனாறு திட்டத்தின் தேவையை உணர்த்திய போது, மற்ற திட்டங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டது அத் திட்டங்களைக் குறை கூறும் நோக்கத்தோடு அல்ல; நண்பரே! கொலு மண்டபத்திலிருப்போரின் கோணல் விழிகளுக்கு உண்மையைப் படம் பிடித்துக் காட்டவே! குறைந்த பலன் கொடுக்கும் முயற்சிகளுக்கெல்லாம் திட்டத்தில் இடம் இருக்கும் போது, குறைந்த செலவில் நிறையப் பலன்தரும் அவசியமான— அவசரமான குடகனாறு திட்டம் ஏன் ஆட்சியாளரின் கடைக்கண் பார்வையில் படவில்லை; இரு கரம் கூப்பி 'எங்கள் இடுக்கண் களைவீர்' என்று வேண்டும் அப்பகுதி மக்களின் மேல் ஏன் காருண்யம் பிறக்கவில்லை?—என்றுதான் புள்ளி விபரத்தோடு கேட்கப்பட்டது.

சண்முக வேலாயுதம்; குலசேகரப்பட்டணம்

(?) காமராசர் மந்திரி சபையில் இருக்கும் மந்திரிகளில் எத்தனை பேர் திராவிட நாட்டுப் பிரிவினையை ஆதரிப்பவர்கள்?

காமராசர் மட்டுமென்ன; அவரது மந்திரி சபை மட்டுமென்ன; அவரும் அவரைச் சேர்ந்த மற்றோரும் கட்டிக் காக்கும் காங்கிரஸ் கோட்டையே ஒருநாள் "வாழ்க வாழ்கவே, வளமார் எமது திராவிட நாடு!" என்ற திராவிடத்தின் தேசிய கீதத்தை முழங்கத்தான் போகிறது!

சப. கருணாகரன், பட்டிக்கலோயா, இலங்கை

(?) புரட்சி என்ற சொல் உலகத்தில் முதன் முதலில் எப்போது தோன்றியது?

நீங்கள் குறிப்பிடும் உலகத்தில், மனிதன் என்று பிறவி எடுத்த ஒருவனுக்கு உயிர் உண்டு; அவனுக்கு சிறுகுடல் என்ற ஒரு அவயவம் உண்டு; கொஞ்சம் சுயமரியாதை உணர்ச்சி உண்டு; ஆகவே வயிற்றையும் மானத்தையும் காக்க அவனுக்கு ஆசையும் உண்டு—என்ற வாழ்க்கைத் தத்துவத்தை சமுதாயத்திலே வதியும் மற்ற வஞ்சக ஓநாய்கள் உணர மறுத்த போது!

த குமார், பெங்களூர்.

(?) 'எல்லையைக் காக்கிறேன்' என்று மார் தட்டியவர் இப்போது என்ன செய்கிறார்?

சொல்லைக் காக்க மறந்து விட்டார்!

ஆறுமுகம், தூத்துக்குடி

(?) எங்களூர் கோயிலுக்குள்ளேயே கள்ளச் சாராயம் காய்ச்சியதால் சிலா கைது செய்யப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வந்திருக்கிறதே, கண்டீர்களா?

கண்டோம்; 'கடவுளருக்கு 'சோமபானம்' தயாரித்தது குற்றமா?' — என்று அந்த ஆண்டவன் மேல் எழுப்பவில்லையே என்பதுதான் ஆச்சரியம்!

ஆகஸ்ட் இதழ் விற்பனையாகிறது!

"இத்தனை சிறப்பான ஏடொன்றை இதுவரை நாங்கள் கண்டதில்லை!"
—இரண்டாமாண்டு துவக்க இதழ் குறித்து பாராட்டுரைகள் குவிகின்றன!

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை
புலவர் குழந்தை
கே. ஏ. மதியழகன்
நா. பாண்டுரங்கன்
கவிஞர் வாணிதாசன்
கவிஞர் முடியரசன்
—ஆகியோரின் எழுத்தோவியங்களுடன்

இலக்கியத் தேனருவியாய்—
ஈடற்ற அறிவுப் புதையலாய்—
புதிய எழில்பெற்று பவனி வருகிறது!

"ஆண்டு விழா"—
ஆசிரியர் மு. க. வின்
கவிதைநடைச் சிறுகதை வழக்கம்போல் உண்டு!

வாங்கிவிட்டீர்களா?

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம் 4—128, மவுண்ட் ரோடு தமிழ்நாடு, சென்னை-6.